இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 02 | திகதி : 06.02.2022 | விலை : 30.00

# யாழ். மறைமாவட்டத்தில் திருப்பாலத்துவ சபையின் தேசிய நிகழ்வுகள்

## பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆயர் தலைமையில் திருப்பலி

திருப்பாலத்துவ சபை பாப்பிறைகள் சபையாக உள்வாங்கப்பட்டதின் நூற்றாண்டாகிய இவ்வாண்டில் திருப்பாலத்துவ சபையின் தேசிய மட்ட நிகழ்வுகள் யாழ் மறை மாவட்டத்தில் இடம்பெற்றன. இத்தேசிய நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநர் அருட்பணி. பசில் றொகான் பெர்னாண்டோ அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வுகளை மறைபரப்பு சபைகளின் யாழ் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான் அடிகளர் ஒழுங்கு செய்திருந்தார்.

### பாசையூர்ப் பங்கில் திருப்பாலத்துவ சபை விழாவும், சின்னம் சூட்டும் நிகழ்வும்



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பாலத்துவ சபைத் தினம் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி ஞாயிறு தினத்தில் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருப்பாலத்துவ சபை விழாவும் 230 பிள்ளைகளுக்கு சின்னம் சூட்டும் விழாவும் நடைபெற்றது. 'இன்றைய சிறார்கள் நாளைய புனிதர்களாகத் திகழவேண்டும்' என வேண்டி சிறார்களுக்கு அறிவுறுத்தினார். தேசிய இயக்குநர் யாழ். மறைமாவட்டம் மீது கொண்ட கரிசனை மிக்க பணிக்கும் வருகைக் குமாக நன்றி கூறி நின்றார். யாழ் மறைமாவட்டத்தில் மறைபரப்பு சபைகளின் செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதாக தேசிய இயக்குநர் குறிப்பிட்டார். ஆழகாக அமைந்த இவ் வழிபாடுகளையும், நிகழ்வுகளையும் பாசையூர் பங்குத்தந்தை அருட்பணி எம். ஜெறோ செல்வநாயகம் அடிகள் ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது.

### புதுக்குடியிருப்பில் சின்னம் சூட்டும் விழா



புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த 270 பிள்ளைகளுக்கு திருப் பாலத்துவ சபையின் நிரந்தர அங்கத்துவம் வழங்கி சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த தை $29^{ம்}$ திகதி மாலையில் நடைபெற்றது. முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஏ.பி.அன்ரனிப்பிள்ளை அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இத் திருப்பலியில் தேசிய இயக்குநர் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். விருந்தினர்கள் புனித சூசையப்பர் வித் தியாலய மாணவ மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் தமிழர் பண்பாட்டிலும் வரவேற்கப்பட்டனர். இந்நாளின் நிகழ்வுகள் அனைத்தையும் முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி A. P அன்ரனிப்பிள்ளை அடிகளார், முல்லை மறைக்கோட்ட திருப் பாலத்துவ சபையின் இணைப்பாளர் அருட்பணி றொபின்சன் ஜோசப் ஆகியோரால் திறம்பட ஒழுங்கு செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் பக்தர்கள்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இம்முறை மட்டுப்படுத் தப்பட்ட எண்ணிக்கையான பக்தர்களோடு மார்ச் மாதம் 11ம், 12ம் திகதிகளில் நடை பெறவுள்ளது. யாழ் அரச அதிபர் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்கள அதிகா ரிகள், சுகாதார பிரிவு உத்தியோகத்தர்களுடனான கூட்டத்தில் இம்முறை 500க்கு உட்பட்ட பக்தர்கள் பங்குபற்றவே அனுமதி வழங்குவதாகவும், இந்தியாவில் இருந்து பக்தர்கள் பங்கேற்க முடியாது எனவும், பங்கேற்கும் எம் மக்கள் மூன்று தடுப்பூசிகளும் கட்டாயம் உள்வாங்கியிருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திருவிழாவுக்கு யாழ், மன்னார் மறைமாவட்டங்களிலிருந்து இறைமக்கள் பங்கேற்பது வழக்கமாகும். எனவே செல்ல விரும்புவோர் உடனடியாக உங்கள் பங்குத்தந்தையூடாகத் தொடர்பு கொள்ளவும்.

## கருத்துக்கணிப்பு வினாக்கொத்து தயார்




2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக ஆயர்கள் மாமன்ற தயாரிப்புப் பணிகள் மறைமாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. யாழ் மறைமாவட்டத்தில் இவ் ஆயத்தப்பணிகளின் முதலாம் கட்டம் நிறைவடைந்த நிலையில் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இரண்டாம் கட்டப் பணியாக வினாக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு இறை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களை அறியும் பணி ஆரம்பமாகியுள்ளது. கருத்துக்கணிப்பு வினாக்கொத்துகளை பங்குத்தந்தையர்களிடமிருந்து பங்கு மக்கள் பெற்றுக் கொள்ள முடியும். பாதுகாவலன் பத்திரிகை இவ்விதழில் 07 ஆம், 08 ஆம் பக்கங்களில் இம் மாதிரிப் படிவத்தைக் காணலாம். விரும்பியவர்கள் அதைப் பூரணப்படுத்தி *குரு முதல்வர், ஆயர் இல்லம், தபால் பெட்டி இலக்கம் 02, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு அஞ்சல் செய்யவும்.

## அல்லைப்பிட்டியில் சர்வதேச பாடசாலை உதயம்




அல்லைப்பிட்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித மொண்பர்ட் சர்வதேசப் பாடசாலை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் கடந்த தை மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் மொண்பர்ட் துறவற சபை அருட்சகோதரர்கள் பாடசாலைகளை நிர்வகிப்பதில் மிகவும் அர்ப்பணமுள்ளவர்கள் என்பதையும், இச்சர்வதேச பாடசாலை யாழ் மறைமாவ ட்டத்தின் நீண்ட காலக் கனவு. இக் கனவு நனவாகியது தன்னுடைய மனதிற்கு மிகுந்த மகிழ்சியைத் தருவதாகவும் கூறினார். அருட்சகோதரர் மரிய பிரகாசம் அவர்களின் அயராத உழைப்பையும், நிர்வாகத் திறனையும் பாராட்டிய ஆயர் வளமான எதிர்காலம் ஒன்று தீவகம் மற்றும் முழு யாழ் மக்களுக்கும் இச் சர்வதேச பாடசாலை வழியாக அமையும் என ஆசித்தார்.

## திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்திற்குப் புதிய பேராயர்



திருவனந்தபுரம் இலத்தீன் உயர்மறைமாவட்டத்தின் பேராயர் மரிய கலிஸ்ட் சூசை பாக்கியத்தின் நிர்வாகப் பொறுப்பு ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதே மறைமாவட்டத்தின் அருட்பணி தோமஸ் ஜெசியான் நீட்டோ அடிகளாரைப் புதிய பேராயராக நியமித்துள்ளார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஜெனீவா அமர்வும் வல்லாதிக்க நாடுகளும்

2021 செப்ரம்பரில் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் இணைந்து அக்கியுஸ் (AUKUS) எனும் இராணுவ வியூகத்தை ஏற்படுத்தியுள்ளன. குவாட் (Quad) கூட்டில் இருக்கும் ஜப்பானும் இந்தியாவும் AUKUS கூட்டில் இல்லை. எனினும், அமெரிக்காவும் பிரித்தானியாவும் இந்தியாவுடன் நேரடியான இராணுவ ஒப்பந்தங்களை நெருக்கமாகப் பேணுகின்றன.

இந்த நிலையில், இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வையும், சர்வதேச மனித உரிமை விடயத்தையும் இணைத்துக் கையாளும் 46/1 தீர்மானத்தின் அடுத்த கட்டத் தலைவிதி எதிர்வரும் செப்ரம்பர், ஒக்ரோபரில் தீர்மானிக்கப்பட முன்னர் அமெரிக்காவும் மனித உரிமைப் பேரவைக்குள் மீண்டும் 2022 இல் சேர்ந்துகொண்டுள்ளது.

எதிர்வரும் தீர்மானத்தின் வீச்சை மேலும் குறைத்து, இலங்கையோடு சேர்ந்து, முன்னர் (2015) போலவே மீண்டும் அமெரிக்கா இவ்வருட இறுதியிலும் நிறைவேற்ற இருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அமெரிக்காவானது 2024 வரை மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கவுள்ளது. டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியில் மனித உரிமைப் பேரவையில் இருந்து வெளியேறியிருந்த அமெரிக்கா மீண்டும் 2022 ஜனவரியில் இணைந்து கொண்டது. கடந்த தீர்மானத்தைப் பிரித்தானியாவே தலைமை தாங்கி நிறைவேற்றியிருந்தது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வுக்கு முன்னதாக, 46/1 தீர்மானம் போடப்படுவதற்கும் முன்னதாக, ஜனவரியில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளும் சிவில் மற் றும் மதத் தலைவர்களும் இணைந்து ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பிய கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (TMTK), மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (TNPF) ஆகிய மூன்று கூட்டுகளும் இன அழிப்புக் கெதிரான சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தன.

இந்த 47 நாடுகளில் அப்போது பிரித்தானியாவும் இந்தியாவும் உள்ளடங்கியிருந்தன. ஆனால் தீர்மானம் தமிழர்கள் எதிர்பார்த்தது போல் அன்றி மிகவும் பலவீனமான ஒன்றாகவே வெளிப்பட்டது.

இந்தவொரு நிலையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தித் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு, சென்ற ஆறாம் திகதி கடிதம் அனுப்பியுள்ளன.

அது மட்டுமல்ல, கடந்தமுறை 13 ஆம் சட்டத் திருத்தத்தை வலியுறுத்தும் 46/1 தீர்மானம் வந்த போது இந்தியா ஆதரித்தும் வாக்களிக்கவில்லை, எதிர்த்தும் வாக்களிக்கவில்லை.

ஆக, பதின்மூன்றை வலியுறுத்தச் சொல்வது இந்தியா மட்டும் அல்ல. கூடவே பிரித்தானியாவும் சேர்ந்தே தற்போது இதன் பின்னால் மும்முரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நிலைமை இவ்வாறு இருக்க, இந்தியாவை மட்டும் தனித்துக் குற்றஞ்சாட்டுவது போன்ற நிலை தோன்றியிருக்கிறது. ஈழத் தமிழ் மக்களுக்கு முழு உண்மையையும் அனைத்துக் கட்சிகளும் வெளிப்படுத்தத் தயங்குகின்றன என்பதே உண்மையாகும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல பெருவிழா
## 02.02.2022 - 11.02.2022

02.02.2022 நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி
10.02.2022 நற்கருணைத் தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி
*யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெறும்.*

**திருத்தலப் பெருவிழா 11.02.2022 (வெள்ளிக்கிழமை)**

முதல் திருப்பலி காலை 5.30 மணி
திருநாள் திருப்பலி காலை 7. 00 மணி

*திருவிழாத் திருப்பலி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.*

– திருத்தலப் பரிபாலகர்

## ஓவியம் வரையும் ஆற்றல் உள்ள அனைவருக்குமான அழைப்பு!

அமைதி, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை மேம்படுத்த

**வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றத்தின்**

# அமைதி ஆய்வு நிறுவனம் PEACE RESERCH INSTITUTE

நடத்தும்

# திறந்த ஓவியப் போட்டி

**கருப்பொருள்**

**“அமைதி நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை உருவாக்குவோம்.”**

### விதி முறைகள்

1. அளவு – பிறிஸ்டல் போட் (24” × 18’)
2. ஓவியத்தைச் சுற்றிலும் சிறிய இடைவெளி (1/2” margin) இருக்க வேண்டும்.
3. வர்ணப்பிரயோகம் : எவ்வித ஊடகத்தையும் பிரயோகிக்கலாம்.
4. கருப்பொருளின் செய்தியை வெளிப்படுத்தும் விதமாக ஓவியம் அமைந்திருத்தல் வேண்டும்.
5. வன்முறையை, பிரிவினையைத் தூண்டும் அம்சங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.
6. ஓவியங்கள் பிறிதொரு ஆக்கத்தின் பிரதிபலிப்பாகவோ, ஏற்கனவே போட்டிகளில் பரிசு பெற்றவையாகவோ இருக்கக்கூடாது.
7. ஓவியத்தின் பின்பக்கத்தில் ஆக்கியவரின் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி எண், வயது, (ஆண்டு / மாதம் / திகதி) ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்த ஓவியப் படைப்பும், (வர்ணம் தீட்டினால் நன்றாக உலர்ந்த பின்) மறைமாவட்டங்களின் போட்டி இணைப்பாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

| யாழ்ப்பாணம் | மன்னார் | மட்டக்களப்பு | திருகோணமலை |
|---|---|---|---|
| அருட்பணி.ஜெறோ செல்வநாயகம் | அருட்பணி.M.செல்வநாதன் பீரிஸ் | அருட்பணி.ஜெறோன் த லீமா | அருட்பணி.V.அலன் IVD |
| பங்குத்தந்தை | இயக்குனர் | இயக்குனர் | பங்குத்தந்தை |
| புனித அந்தோனியார் ஆலயம் | கலையருவி | மறைக்கல்வி நிலையம் | கிறிஸ்து அரசர் ஆலயம் |
| பாஷையூர் | 202, தலை மன்னார் றோட் | மத்திய வீதி | ஹொறபொத்தான றோட் |
| யாழ்ப்பாணம் | மன்னார் | மட்டக்களப்பு | கன்னியா திருகோணமலை |
| 0773068807 | 0773517707 | 0772843224 | 0774282738 |

அனுப்ப வேண்டிய கடைசித்தினம் : ஏப்ரல் 30, 2022

சிறந்த ஓவியங்களுக்கு சான்றிதழும், பணப்பரிசுகளும் வழங்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் ஓவியங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு அவை அனைத்தும் அமைதி ஆய்வு நிறுவனத்தின் ஓவியக் கண்காட்சிக் கூடத்தில் நிரந்தரமாக காட்சிப்படுத்தப்படும்.

1ம் இடம் : ரூபாய் 10,000 2ம் இடம் : ரூபா 7,000 3ம் இடம் : ரூபா 5,000
4ம் இடம் : ரூபாய் 3,000 5ம் இடம் : ரூபா 2,000

நடுவர்கள் குழுவால் தெரிவு மேற்கொள்ளப்படும்.

அத்துடன் தலா 1000 ரூபா கொண்ட 10 பரிசுகள்.

**அருட்பணி.ம. ஜெறோ செல்வநாயகம்**
**போட்டி இணைப்பாளர்**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 . 05 . 1936

விண்ணில் 19 . 02 . 2021



குருவாக :- 01.09.1962

## அருட்பணி G.E. மேரி யோசவ்

“ஆண்டவரின் ஆசியே இறைப்பற்றுள்ளோருக்கு கிடைக்கும் பரிசு (சீ.ஞா.11:22)


எம் வாழ்வின் அடித்தளமாக இருந்தவரே
அன்புத் தந்தையே எம் வாழ்வுக்கு வழிகாட்டிய தெய்வமே
உமக்கு ஒருபோதும் மரணம் என்பது இல்லை
ஏனெனில் நீர் எம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்
இறைவனில் ஆன்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

100/2 மவுண்கார்மேல் வீதி
யாழ்ப்பாணம்

# 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 31 . 03 . 1948

இறப்பு 10 . 01 . 2022



## சொலமன் அல்பிறட் (ஜேயராசா)

பரலோக தந்தாய் உமது சித்தப்படி நீர் உமது திருவடிக்கு அழைத்துக்கொண்ட சொலமன் அல்பிரட் அவர்களின் 31வது நாளில் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகக் கண்ணீரோடு வேண்டுகின்றோம். இவருக்கு நீர் அளித்த வாழ்வு எனும் அற்புதமான ஆசீர்வாதத்திற்காகவும், நற்பண்புகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். சிறப்பாக இவரது முதுமையில், நோயின் துன்பங்களில் நீர் இவரோடு கூடவே பயணித்த கருணைக்காக நன்றிக் கரம் குவிக்கின்றோம். தந்தாய் இவரது ஆன்மாவை ஏற்று உன்னதர் திருமுன் இவர் எக்காலமும் இன்புற்றிருக்க இறஞ்சுகின்றோம்.

சகோதரம்: லில்லி மற்றும் உறவுகள்

36/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

# நெடுந்தீவில்
## இளையோர் ஒன்றுகூடல்

தீவக மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள நெடுந்தீவு புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தினரின் வருடாந்தத் திருவிழா 23ம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

நெடுந்தீவு புனித யுவானியார் ஆலய மற்றும் புனித மரியாள் ஆலய இளையோர்கள் இணைந்து இவ்விழாவினைச் சிறப்பித்தார்கள்.

உதவிப்பங்குதந்தை அருட்பணி விமலசேகரன் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இத்திருவிழாவில் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## காவலன் கலசம்

# எம் வாழ்வில் இறைவனைக் கண்டு மன மகிழ்ச்சியுடன் வாழ்வோம்

## யாழ் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநரின் செய்தி

இன்றைய நாட்களில் முழு உலகுமே சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றது. பெருந்தொற்றுக் காரணமாக மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதித்து நிம்மதி அற்ற நிலையில் அச்ச உணர்வுடன் நாம் வாழ்கின்றோம்.

எம் நாட்டை எடுத்து நோக்கும் போது பெருந்தொற்றின் காரணமாக இயல்பு நிலை முடக்கங்களினாலும், அரசியல் சமூக முறைமைகளின் பின்னடைவினாலும் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் திடீர் விலையேற்றம் காரணமாகவும் அன்றாட வாழ்வியலின் சுமையினால் பெரும் துன்பத்தை எதிர்கொண்டு வாழ்வில் மகிழ்ச்சியை இழந்துள்ளோம். இந்நிலையானது எம் குழந்தைகளையும் வெகுவாக இன்று பாதித்துள்ளது.

இந்நிலைக்கான காரணம் யாது என ஆய்கின்ற போது நாம் இறைவனை மறந்து, உலகக் காரியங்களில் நாட்டம் கொண்டு சமூக ஊடகங்களின் காரணமான சமூகத் தீமைகளுக்கு அடிமையான நிலையே காரணம் என்பதை உணர்கின்றோம்.

இந்நிலையில் இவ்வாண்டு திருப்பாலத்துவசபை தினக் கருப்பொருளாக **“இறைவனைக் கண்டறிந்ததால் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்”** என்ற கருப்பொருள் காலத்தின் தேவைக்குரிய கூற்றாக அமைகின்றது. எம் துன்பங்களில் இருந்து நாம் மீண்டு உள்ளார்ந்த மகிழ்ச்சியை அடைய எமது வாழ்வில் இறைவனைக் கண்டறிய வேண்டும் என்ற உண்மையை எம் பிள்ளைகளுடன் இணைந்து நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். இறைவன் எம் வாழ்வில் கணத்துக்குக் கணம் எம்முடன் வாழ்கின்றார். எம் போக்கிலும் வரத்திலும், எம் சிந்தனையிலும், செயற்பாடுகளிலும் உடன் இருக்கின்றார் என்பதை எம் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.

> **“எம் துன்பங்களில் இருந்து நாம் மீண்டு உள்ளார்ந்த மகிழ்ச்சியை அடைய எமது வாழ்வில் இறைவனைக் கண்டறிய வேண்டும் என்ற உண்மையை எம் பிள்ளைகளுடன் இணைந்து நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்”**

திருஅவை ஆயர் மாமன்றத்துக்காகத் தம்மைத் தயார்ப்படுத்துகின்ற இக்காலத்தில் நாமும் குழந்தைகளுடன் இணைந்து புதுப்பித்தல் பாதையில் பயணிக்க வேண்டும். கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் திருப்பாலத்துவ சபைகள் நிறுவப்பட்டு சிறுவர்கள் வழிதவறாது விசுவாசப் பாதையிலும், நற்பாதையிலும் பயணிக்க அவர்களுக்கான களங்கள் பல கோணங்களில் அமைக்கப்பட்டு வருகின்றது. அவற்றைச் சிறுவர்கள் பயன்படுத்திக் கொள்வதுடன், திரு நிலையினரும், பொது-நிலையினரும், இவ்விடயத்தில் சிறுவர்களுக்கு வெறும் கைகாட்டிகளாக நின்று செயற்படாது வழிகாட்டிகளாக அவர்களைப் பசும் புற்தரையில் நடத்திச் செல்ல வேண்டும். இந்நிலையில் சிறுவர்கள் ஒவ்வொருவரும் தம்மை மறைத்தூதுவர்களாக்க முன்வர வேண்டும். இறை அழைத்தலுக்கு செவிமடுத்து நற்கனி கொடுக்கும் விருட்சங்களாக சிறுவர் உலகம் செழிக்க வேண்டும். நன்மையை நோக்கி, இறை பணியை நோக்கி "இதோ நான் வருகின்றேன்" என ஒவ்வொரு சிறுவர் உள்ளமும் வீறுநடைபோட்டால் சிறுவர்கள் புனிதர்களாவதுடன், நாமும் நம் சமூகமும், நம் தேசமும் முழு உலகமுமே இன்பக் கானான் வாழ்வை இவ்வுலகில் வாழலாம்.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருடந்தோறும் தை மாதத்தின் இறுதி ஞாயிறு தினத்தை இறை வார்த்தையின் ஞாயிறு தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். சிறுவர்கள் இறைவார்த்தைக்கு செவிமடுத்து இறைவார்த்தை வழியில் பயணம் தொடர அழைக்கப்படுகின்றார்கள்.

இறைவார்த்தை எமது வாழ்வுக்கு வழிகாட்டியாகவும், எமது பாதைகளுக்கு வெளிச்சமாகவும் இருக்கின்றது. அத்துடன் இறைவார்த்தை என்பது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போன்றது. அது தன் பயனைக் கொடுக்காது வெறுமையாகத் திரும்பி வராது. இத்தகைய சக்தி மிக்க இறைவார்த்தை சிறுவர்களுக்கு உடல் உள சக்தியாக அவர்கள் உண்ணும் உணவோடு சேர்க்கப்பட வேண்டும். இறைவார்த்தை என்பது வாழ்வு தரும் வார்த்தை ஆகையால் இறைவார்த்தை வாழ்வாக்கப்பட வேண்டும். வாழப்படவும் வேண்டும். சிறுவர்கள் முழு மனதுடன் இறைவார்த்தையைச் செவிமடுப்பதற்குத் தம் மனங்களை நல்ல விளை நிலங்களாக உழுது பண்படுத்திக் கொண்டால் அதில் தூவப்படும் இறைவார்த்தைகள் நூறுத்தனையாய் பலன் கொடுக்கும். தேசிய திருப்பாலத்துவசபைத் தினம் சிறக்கவும் சிறுவர்களின் எதிர்கால வாழ்வு இறை விசுவாசத்தின் ஆழத்தில் கட்டியெழுப்பப்படவும், சிறுவர்கள் புனிதத்துவத்தை நோக்கி மறை போதகர்களாக சிறு வயது முதல் வாழவும் இறை அருள் வேண்டி ஆசித்து வாழ்த்துகின்றேன்.




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் ஒன்றிணைவு குறித்து நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**
ப: பருவகாலத்துக் கட்சிகள் ஆனந்தன்!

*(அருள், வவுனியா)*
**கே: அரிசி விலை ஏறிப்போவதைப் பார்த்தால் உணவுத் தட்டுப்பாடு வெகு விரைவில் சந்திப்பதைத் தவிர்க்க முடியாது போகும்போல் உள்ளது! என்ன நினைக்கின்றீர்கள்?**
ப: மலர், உணவுத் தட்டுப்பாடு மட்டுமல்ல பஞ்சமும் பட்டினியும் வர வாய்ப்புண்டு! நாம் விளைவிக்கும் நெல்லினை நம்மிடமிருந்து பெற்றுக்கொண்டு நமக்கே உயர்விலைக்கு விற்கின்ற வர்த்தகம் இப்போது நடக்கின்றது! வீட்டுத் தோட்டம், சிறுதானியப் பயிர்ச்செய்கை போன்றவற்றை ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில், வீட்டுச் சுற்றாடலில் மேற்கொள்வது இன்றியமையாதது. இல்லையென்றால் அதோகதிதான்!

*(ராணி, யாழ்ப்பாணம்)*
**கே:** காதலிக்கும்போது 'நீ மட்டும் எனக்குப் போதும்' என்கின்றவர்கள் கலியாணம் என்று வரும்போது கட்டுக்கட்டாகக் காசினை எதிர்பார்க்கும் காதலர்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?
ப: ஒருவகையில் பிழைக்கத் தெரிந்த பிள்ளைகள் இவர்கள்! 'பத்து ரூபா கேட்பவனைப் பிச்சைக்காரன் எனக் கேவலப்படுத்தும் நம் சமூகம்தான் பல இலட்சம் கேட்பவனை மாப்பிள்ளை என்று கௌரவப்படுத்துகின்றது!' என்ற சகோதரி பவியின் கூற்று சிந்திக்கத்தக்கது ராணி! இது ஒரு பெரும் அடிமைத்தனம் என்பதை நம் சமூகம் உணர்வதற்கான அறிகுறிகூடத் தெரியவில்லை!

*(யாழ்பாடி, யாழ்ப்பாணம்)*
**கே: யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதர் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் சீனாவுக்கும் இடையில் நல்லுறவைப் பேண விரும்புகின்றோம் எனக் கூறியுள்ளார். என்ன அர்த்தமோ!?**
ப: யாழ்பாடி, பல அர்த்தங்களில் இக்கூற்றுப் பகிரப்பட்டிருக்கலாம்! ஏற்கனவே, தீவகங்களில் ஒன்றினை சீன கையகப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. நல்லுறவை ஏற்படுத்தக் கொழும்பில் அமைத்த 'போட் சிற்றி'யைப் போல யாழ்ப்பாணத்திலும் ஒரு 'போட் சிற்றி' அமைக்கும் அர்த்தத்திலும் கூறப்பட்டிருக்கலாம். நாளடைவில் யாழ்ப்பாணமும் 'மேட் இன் சைனா'வாக மாறிவிடுமோ என்ற ஆதங்கம் பலரிடம் இருக்கின்றது. சீனா இந்த விடயத்தில் மிகவும் 'நொட்டோரியஸ்'!

*(யோசப், யாழ்ப்பாணம்)*
**கே:மண்ணெண்ணெய்க்கு மாற்றாக விமான எரிபொருளை இறக்குமதி செய்ய இருப்பதாக எரிசக்தி அமைச்சிலிருந்து செய்தி வெளியாகி இருப்பதாகத் தகவல்! என்ன நடக்கப் போகின்றதோ?**
ப: பாத்திரங்களும் பறக்கப் போகின்றன! 'றண்வே' போட்டு வையுங்கள் யோசப்!

*(ரவி, மன்னார்)*
**கே: 'குழந்தை மாஸ்ரர்' என அன்பாக அழைக்கப்படும் உங்கள் தந்தை கலைத்தவசி செபஸ்தியான் செபமாலை அவர்களின் இழப்பு தமிழ் கலை இலக்கிய உலகிற்கும் திரு அவைக்கும் பெரும் இழப்பு என்பதை அவர் இறந்தபோது மக்கள் திரண்டு வந்து அளித்த அஞ்சலியிலும் மற்றும் வெவ்வேறு நபர்கள் அளித்த பகிர்தல்களின் ஊடகவும் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. அவரின் வாழ்க்கை இன்று பலருக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. கலைத்தவசி என ஏன் அழைக்கப்படுகின்றார்? அவரைப்பற்றிச் சுருக்கமாகக் கூற முடியுமா?**
ப: ரவி, அவரைப்பற்றிக் கூற நிறைய உண்டு, விரிவாகக் கூறலாம்! நீங்கள் சில வார்த்தைகளில் கேட்டபடியால் சில வார்த்தைகளில் மட்டும் கூறுகின்றேன்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

அவர் 40 ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தவர். கலை, சமூக, மறைத் தொண்டில் 60 ஆண்டுகளைக் கடந்தவர். திருமண வாழ்வில் 59 ஆண்டுகளை நிறைவுசெய்தவர். சமூக முன்னேற்றம், சமுதாய சமத்துவம், தமிழர் விடுதலை, பெண் விடுதலை, கல்வி வளர்ச்சி, மத நல்லிணக்கம் போன்றவற்றை முன்னெடுக்க கலையை அடிநாதமாகக் கொண்டு தன் ஆயுள்பூராகவும் பல்வேறுபட்ட தியாகங்களைச் செய்து அர்ப்பணிப்புடன் வாழ்ந்த காரணத்தினால் 2012 இல் வெளியிட்ட அவரின் பணி நயப்பு மலருக்கு 'கலைத்தவசி' எனப் பெயரிட்டோம்!

*(றமேஷ், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: அரச பணியாளர்களுக்கு ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு என நிதியமைச்சர் கூறியிருக்கின்றார். கிடைக்குமா?**
ப: கிடைக்குமா அல்லது இதுவும் கிடப்பில் கிடந்துவிடுமா எனத் தெரியவில்லை! ஆனால், ஒரு பக்கத்தால் கொடுத்து இன்னொரு பக்கத்தால் பிடுங்கப் போகின்றார்கள் என்பதைப் பொருட்களின் விலைவாசி கட்டியம்கூறி நிற்கின்றது!

*(சீலன், மன்னார்)*
**கே: நாட்டில் ஏற்பட்டிருக்கும் விலையேற்றத்தை அவதானிக்கின்றபோது நம் நாட்டில் வாழ முடியாதநிலை ஏற்பட்டுவிடும்போல் தோன்றுகின்றது! என்ன நினைக்கின்றீர்கள்?**
ப: சீலன், இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு நாள்தோறும் படையெடுக்கும் ஆயிரக்கணக்கான நம் மக்களின் தொகையைப் பார்க்கின்றபோது உங்களுடைய ஆதங்கம் புரிகின்றது! ஆயினும், 80, 90களில் நாட்டில் வடபகுதி மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கடுமையான பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் நாம் உயிர் வாழ்ந்தோம்! ஆகவே, அந்த அனுபவங்களையும் மீட்டிப் பார்த்து இன்றைய சூழலுக்கு ஏற்ப நாம் வாழக் கற்றுக்கொள்வதுதான் உசிதமானது.

*(மல்லிகா, முல்லைத்தீவு)*
**கே: ஆளும்கட்சி, ஏதோ சாதித்து விட்டதுபோலகொக்கரித்துக்கொண்டு இருக்கின்றது. அக்கொக்கரிப்புக்கு சவால் விடுக்கும்வண்ணம் எதிரணி குரைத்துக்கொண்டு நிற்கின்றது! அரசியலில் என்ன நடக்குமோ?**
ப: கொக்கரிப்பதும் குரைப்பதும்தானே இலங்கை அரசியலில் சிலகாலம் நடந்து வருகின்றது. இது உங்களுக்குத் தெரியாதா மல்லிகா?

# நெஞ்சில் ஏற்படும் எல்லா வலிகளும் இதய நோய்களுக்கான அறிகுறிகளல்ல

நெஞ்சில் ஏற்படும் வலிகள் மார்பின் மேற்புறம், தசைகள், விலா என்புகள், நுரையீரல்களிலிருந்தும் உருவாக்கப்படலாம். இவை இதய நோய்க்குக் காரணம் எனக் கூறமுடியாது.

**இதயத்தில் ஏற்படாத வலிகள் இவ்வாறு அமையும்**

- திடீரென நெஞ்சில் தோன்றி மறையும் வலி
- நெஞ்சில் எறும்பு கடிப்பதைப் போன்று அடிக்கடி ஏற்படும் வலி
- உள், வெளி மூச்சுச் செல்லும்போது ஏற்படும் வலி

இவை இதய நோய்க்கு ஏற்படும் அறிகுறிகளாக அமையாது.

**இதய நோய்களுக்கான வலி பின்வருமாறு அமையும்**

- மார்பின் மத்தியில் ஏற்படும் ஒருவித இறுக்கம் அல்லது குத்துவலி
- இந்த வலி கழுத்து, தாடை, நெஞ்சின் பின்புறம், தோற்பட்டை புயங்கள் எனப் பரவிச் செல்லும்
- நெஞ்சின் மேல் பெரிய பாரமொன்றை வைத்தது போன்றிருக்கும்
- மார்பு துடிப்பு அதிகரிப்பதோடு மூச்செடுப்பதில் சிரமம் ஏற்படும்
- வாந்தி, வயிற்றில் எரிச்சல், குமட்டல் ஏற்படும்

**இதயநோய் ஏற்படுவதற்கான காரணம்**

எமது உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் தேவையான குருதியை விநியோகிக்கும் பிரதானமான உறுப்பு இதயமாகும். குருதியை விநியோகிப்பதற்காக இதயம் இடைவிடாது சுருங்கி விரிகின்றது. இது நிறுத்தப்படும்போது எமது உடலின் அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்படும்.

இதயம் தொடர்ச்சியாக தனது செயற்பாட்டைச் செய்வதற்கு இதயத் தசைகளுக்குத் தினமும் சிறந்த குருதிச் சுற்றோட்டம் அவசியமாகின்றது. இதற்காக இதயத்தில் இடது வலது முடியுரு நாடி என்னும் குருதிக்கலன்கள் காணப்படுகின்றது. இவற்றினூடாகச் சீராகக் குருதி செல்லும் வரையில் இதயம் தொடர்ச்சியாக நன்றாக இயங்கும். முடியுரு நாடிகளில் ஏதாவது தடை ஏற்படின் இதயத் தசைகளுக்கு வழங்கப்படும் குருதியினளவு குறைவுபடும். இதனால் இதயத் தசைகளில் வலி ஏற்படும். இதுவே அன்ஜைனா (Angina) எனப்படுகிறது. இவ்வாறான நிலைகளில் அவ்விடங்களில் குருதியுறைந்து முடியுரு நாடிகளின் தொழிற்பாடு உடனடியாக தடைப்படும்.

முடியுரு நாடிகளின் சுவரில் கொழும்புப் படிந்து அவை பருமனில் சிறிதாகுவதால் குருதி செல்வதில் தடை ஏற்படுகிறது. சிலவேளைகளில் இவை திடீரென வெடிக்கவும் கூடும். இதனால் குருதி அவ்விடத்தில் கட்டியாகி இதயத் தசைகளுக்கு ஒட்சிசன் மற்றும் போசணை கிடைக்காமையினால் இதயத் தசை சேதமடையும். அதனைத் தொடர்ந்து இதயம் செயலிழக்க நேரிடும். உலகில் பெரும்பாலானோர் இதன் காரணமாகவே இறக்கின்றனர்.


நாடிகளில் படியும் இக் கொழுப்பைத்தான் கொலஸ்திரோல் (Cholestrol) என்கிறோம். நாம் உட் கொள்ளும் கொழுப்பு மிக்க உணவுகளால் ஈரலில் கொலஸ்திரோல் உருவாகின்றது. கொலஸ்திரோல் படிவடையும் வேகம் பின்வரும் காரணிகளால் அதிகரிக்கப்படும்.

- புகைப்பிடித்தல், புகையிலைப் பாவனை
- உயர் குருதியமுக்கம்
- நீரிழிவு நிலைமை
- அநாவசியமான உடல்நிறை அதிகரிப்பு
- நீண்டகால மனவுளைச்சல்
- தவறான உணவுப் பழக்கங்கள்
- உடற் பயிற்சிகள் இல்லாமை
- பரம்பரைக் காரணிகள்

எமதுவயது அதிகரிப்போடு இயற்கையாக ஏற்படும் நிகழ்வாகக் குருதிக்கலன்களில் கொலஸ்திரோல் படிவு நிகழ்கின்றது. எனவே மேற்படி காரணிகளை அறிந்து அவற்றைத் தவிர்த்து செயற்படும்போது இதயம் ஆரோக்கியமாக செயற்படுகின்றது.

**தவறான உணவுப் பழக்கங்களாக**

- அதிக கொழுப்புள்ள உணவுகளை உட்கொள்ளல்
- அதிகளவு உப்பைக் கொண்ட உணவுகள்
- அதிகளவு சீனி அடங்கிய உணவுகள்
- மதுபானங்கள்
- ஆழமான எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகள்
- பன்றி, மாடு போன்ற இறைச்சி வகைகள்



அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

- சோடா மற்றும் உடனடிப்பானங்கள், ஐஸ்கிறீம்

அத்துடன் மன உளைச்சல் நீண்டகாலமாகத் தம்மிடம் இருக்குமானால் இதுவும் இதய நோய்க்குக் காரணமாக அமையும். மன உளைச்சலினால் நித்திரை குறையும். அதிரினலீன் எனும் ஓமோன் அதிகமாக சுரக்கப்படுவதால் குருதிக் கலன்களில் கொழும்புப் படியும் அளவு அதிகரிக்கும். இதயத் துடிப்பு வீதம் அதிகரிக்கும். குருதியில் சீனியின் அளவு அதிகரிக்கும். குருதி உறையும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

மன ஓய்வுக்காகத் தினமும் 6-8 மணித்தியாலங்கள் நித்திரை கொள்வது அவசியமாகும். மன அமைதி தரக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

*உதாரணம்:* தியானம் செய்தல், இசையை அனுபவித்தல், விளையாடுதல்

அத்துடன் உடற்பயிற்சி செய்தலும் மிகுந்த பயனளிக்கும். அன்றாட செயற்பாடுகளில் நடைப்பயிற்சி, சைக்கிளோட்டம், நீச்சல் விளையாட்டு, வீட்டுத் தோட்டப் பராமரிப்பு, நடனம் போன்றவற்றில் ஈடுபடும் போது மனதில் உற்சாகம், மகிழ்ச்சி ஏற்படுவதோடு புத்துணர்ச்சியும், மன எழுச்சியும் ஏற்படுகின்றது.

இளம் வயதினர் தினமும் 1 மணி நேரம் என்ற வகையில் வாரத்தில் 5 நாட்களும், வளர்ந்தவர்கள் தினமும் 30 நிமிடங்களும் என வாரத்தில் 5 நாட்களும் உடற்பயிற்சி செய்வது மிகவும் உகந்தது.

இதயம் துடிக்க மறுக்கும்போது இடர்படுவதை விட முன்னெச்சரிக்கையாக எமது உணவுப் பழக்க வழக்கங்கள், உடற்பயிற்சி என்பவற்றில் கவனமெடுப்போம். வருடத்திற்கொருமுறை எமது குருதியைப் பரிசோதனை செய்து சீனியின் அளவு, கொலஸ்திரோல் அளவு, குருதி அமுக்கம் என்பவற்றைச் சாதாரண மட்டத்தில் பேணிடுவோம்.

ஆடம்பரமான செலவுகளைத் தவிர்த்து, அவசியமான தேவைகளை நிறைவேற்றி இருப்பதுடன் திருப்தியடைவோம். மனதில் நிம்மதியும், மகிழ்ச்சியும் இருக்கும்போது எம்மை எந்த மன உளைச்சலும் நெருங்க முடியாது.

## சிக்கல்கள்

கயிற்றில் போட்ட முடிச்சுக்களைக் காட்டி "இதை அவிழ்க்க முயலுங்கள்" என்றார் குரு. அதற்கு முன் முடிச்சு போடுவதை நான் பார்க்க வேண்டும்" என்றார் அவரது சிடர். பாராட்டிய குரு சொன்னார், 'ஒரு சிக்கல் ஏற்படுகிறதென்றால் அதற்குள் எப்படி மாட்டிக் கொண்டோம் என்பதைக் கண்டுபிடியுங்கள். அப்போது அதிலிருந்து வெளிவரும் வழி தானாக தெரிய வரும்" பலரும் சிக்கல்களைத் தீர்க்கும் அவசரத்தில் அவை உருவான விதத்தை உணர்வதேயில்லை. சிக்கல்களைத் தீர்க்க சீரான மனதும், காரணத்தை ஆராயும் அமைதியான ஆய்வுமே தேவை ஒவ்வொரு பிரச்சினைக்குள்ளும் அதற்கான தீர்வு உள்ளது!

## தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**55. இயேசு திருமுழுக்குப் பெற்றாரா?**

ஆம். தமது முப்பதாம் வயதில் திருமுழுக்குப் பெற்றார்.

**56. யாரிடம் திருமுழுக்குப் பெற்றார்?**

திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார்.

**57. இயேசு திருமுழுக்குப் பெற்றவுடன் என்ன நிகழ்ந்தது?**

வானம் திறக்க, இறைவனின் ஆவியார் புறா வடிவில் இயேசு மீது இறங்கி வந்தார். அப்பொழுது, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது (மத். 3:17). இதன் பிறகு இயேசு தமது மீட்புப் பணியை வெளிப்படையாகத் தொடங்கினார்.

**58.இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்கின்றோம்?**

இறைவன் ஒருவரே என்றும், அவர் தந்தை, மகன், தூய ஆவியார் என மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்றும் அறிந்து கொள்கிறோம். இந்த உண்மையையே மூவொரு இறைவனின் மறைபொருள் என்கிறோம்.

**59. இயேசு தம் மீட்புப் பணிக்குத் துணையாக யாரைத் தேர்ந்துகொண்டார்?**

இயேசு தம் சீடர்களுள் பன்னிருவரைத் தேர்ந்து கொண்டார். அவர்களைத் திருத்தூதர் என்று அழைத்தார்.

**60. இறைவனின் அன்பைப் பற்றி இயேசு கூறுவது என்ன?**

1) இறைவன் நம் அனைவரின் அன்புத் தந்தை. நாம் அனைவரும் அவருடைய பிள்ளைகள்.
2) அனைத்திற்கும் மேலாக நாம் இறைவனை அன்பு செய்ய வேண்டும்.

**61. பிறர் அன்பைப் பற்றி இயேசு கூறுவது என்ன?**

1) இயேசு நம்மை அன்பு செய்வதுபோல நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும்.
2) பகைவரையும் நாம் அன்பு செய்ய வேண்டும்.
3) இயேசு நம்மை மன்னிப்பதுபோல நாமும் பிறரை மன்னித்து வாழ வேண்டும்.

**62. தாம் இறைவனின் மகன் என்பதை இயேசு எவ்வாறு வெளிப்படுத்தினார்?**

தம் அரும் அடையாளங்களாலும், போதனையாலும், பாவிகளை மன்னித்ததாலும், சிலுவைச் சாவையே ஏற்றதாலும், தாம் கடவுளின் மகன் என்பதை இயேசு வெளிப்படுத்தினார்.

**63. இயேசு செய்த முக்கியமான அரும் அடையாளங்கள் யாவை?**

1) தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றினார்.
2) அப்பம் பலுகச் செய்தார்.
3) புயலை அடக்கினார். கடல்மீது நடந்தார்.
4) நோய்களைக் குணப்படுத்தினார்.
5) பேய்களை ஓட்டினார்.
6) இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தார்.
7) தாம் இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

**64. ஆகவே, இயேசு கிறிஸ்து யார்?**

இயேசுகிறிஸ்து உண்மையாகவே இறைவனும் மனிதரும் ஆனவர். பாவத்திலிருந்து நம்மை மீட்பவர். இறைவனுக்கும் மனிதருக்கும் உள்ள உறவில் நிறை வாழ்வு காண நமக்கு வழி காட்டுபவர்.

(தொடரும்...)

# இலங்கையில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நூற்றாண்டுப் பணி

## "இறைவனே எம் நிறைவு" எனும் எமது அருங்கொடையினை அனுபவித்து கிறிஸ்துவின் அரசைப் பரப்பும் எம் பணி இன்று பல வழிகளினூடாகப் பரப்பப்படுகின்றது



அருட்சகோதரி நிர்மலினி
சபைத்தலைவி

2022 மாசித் திங்கள் ஐந்தாம் திகதி அப். கார்மேல் அருட்சகோதரிகள் இலங்கைத்தீவில் தம் பணியினை நிறைவு செய்யும் நூற்றாண்டினை மிக மகிழ்வுடன் நினைவு கூருகின்றனர். இறைவன் கடந்த நூற்றாண்டில் எமக்கு அளித்த மாபெரும் கொடைகளுக்காக நன்றி கூறி அனைத்து மறைமாவட்டங்களிலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றனர்.மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள் மற்றும் திரு அவையுடன் இணைந்து இந்நாளைச் சிறப்பிக்கின்றனர். இந்தியாவிலிருந்து வருகை தந்த நான்கு அருட்சகோதரிகளுடன் ஆரம்பித்த எம் பணி இன்று விருட்சமாக இலங்கையில் பல பாகங்களுக்கும் பரவியுள்ளது. இவ்வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து இவ்வுலகை விட்டுச் சென்ற எம் அருட்சகோதரிகளையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.



அருட்சகோதரி மாறி லூட்ஸ்
மாகாணத் தலைவி

### அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் பணிகள்

வண. அன்னை வெரோணிக்காவினால் கீழை நாடுகளில் எம் மீட்பர் கிறிஸ்துவின் பணியைத் தொடர்ந்து ஆற்ற ஆரம்பிக்கப்பட்ட இச்சபை ஆரம்பத்தில் கல்வி மூலம் அறிவொளியைப் பரப்ப, பல் வகைப் பட்ட கல்வி நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆயினும் பிற்காலத்தில் காலத்தின் தேவைகளை உணர்ந்து தம் சேவையினைப் பல்வேறு பட்ட பணிகள் மூலம் பரவலாக்கினர். அவ்வகையில் இளம் பெண் களுக்கான விழுமியக்கல்வி, முன்பள்ளிப் பாடசாலைகள், பங்குத்தளங்களில் பல்வேறுபட்ட பணிகள், பெண்கள் இல்லங்கள், பெண்கள் விடுதிகள், பாலர் நிலையம், முதியோர் இல்லங்கள் தேயிலைத் தோட்டங்களில் பணி என அனைத்து வயதினருக்குமான சேவைகள் மூலம் கிறிஸ்தவ விழுமியங்களை மக்கள் உள்ளத்தில் விதைக்கின்றனர். அந்தவகையில் அப். கார்மேல் சபையினர் பல்வேறு சேவைகளை ஒரு நூற்றாண்டு காலமாக ஸ்ரீலங்காவில் ஆற்றி வருகின்றனர்.

### விழுமியக் கல்வி

தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அதை விழிப் படையச் செய்வதுதான் விழுமியக்கல்வி. அனுபவக்கல்வி. சமூக, தொழில்நுட்ப துரித வளர்ச்சியும், உலகமயமாக்கலும் எமது சமூகத்தின் ஒழுக்கத்திலும், சமூக வளர்ச்சியிலும் பாரிய மாற்றங் களை ஏற்படுத்துவதை நாம் நேரில் காண்கின்றோம். வெறுப்பூட்டத்தக்க நுகர்வுக்கலாசாரமும், மாணவர் மத்தியில் மிருதுத்திறன்கள் (soft skills) வளர்க்கப் படவில்லை என்பது கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காட் டும் முக்கிய குறைபாடாகும். பிறருடன் பண்பாகப் பேசுதல், நவீன தொடர்பு சாதனங்களைப் பண்பாகப் பிர யோகித்தல், நன்றியுடையவராயிருத் தல், பிறரை உபசரித்தல், தன்னைப்போல் மற்றவரையும் நேசித்தல், மன்னித்தல், சகித்தல்போன்ற பண்புகள் யாவும் மிருதுத் திறன்களுள் அடங்கும். பாவனைப்பொருள் களின் தேவைக்கு மிஞ்சிய ஆசையின் ஆவேசமும், சமூக, கலாசாரக் கட்டமைப் பைச் சீர்குலைக்க முனைகின்றன.



பூகோள மயமாக்கல் எம்மை ஒன்றிணைப்பதை விட பிரிவினையை அதிகரிக்கின்றது. உறவுகள் அதிகரித்தாலும் அதில் ஆழமில்லை. குடும்ப உறவு-களும், நட்புகளும் உண்மையற்றதாக உருவெடுத்துள்ளது.

"ஆன்மீகம் இன்றி இறை நம்பிக்கை" "மாதா, பிதா குரு தெய்வம்" "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை" என்ற முதுமொழியில்லாத சமூகமாக மாறிவரு கின்றது. சமூகத்தில் வழக்கிழந்து விட்டது. கல்வியறிவு அதிகரித்தாலும் மனிதப் பண்புகள் குறைந்து வருவதை நாம் காண்கின்றோம்.

எமது சிறுவர்கள் இனம், மதம், மொழி, சாதி, சமயம், பால், நிறம், பெற் றோரின் அந்தஸ்து, பூர்வீகம், உடல் நிலை முதலியவற்றிற்கு அப்பால் நின்று பாதுகாக்கப்படவேணடியவர்கள். மாணவனின் அடிப்படைத்தேவைகள் பூர்த்திசெய்யப் படாவிடில் அவனில் வளர்ச்சியைக் காண முடியாது. எமது மாணவர்களின் அடிப்படைத்தேவை விழுமியக் கல்வியாகும்.

எனவே, எம் வருங்கால சமூகத்தைப் பாதுகாக்க விழுமியக்கல்வி புகட்டலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் 2000 ஆண்டிலிருந்து விழுமியக்கல்வியில் அக்கறை கொண்டு தமிழில் மாணவர்கள் பயன்பாட்டிற்கென நூல்களைத் தயாரித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆங்கி லத்திலும், தமிழிலும் கற்பித்து வந்துள்ளனர். தமிழில் இந்நூல் "மகிழ்ச்சியான வாழ்வு" என்ற தலைப்பில் ஆசிரியர்களுக்கென அறிவுரைப்பு வழிகாட்டி நூல்களும் வெளியிட்டுள்ளனர். வடமாகாணக் கல்வித்திணைக்கழத்தின் அனுசரணையுடன் இவ்வகுப்புகள் வடமாகாணத்தில் உள்ள 5 வலயங்களில் உள்ள பாடசாலைகளுக் கும் அறிமுகம் செய்யப்பட்டது. இக்கல்வி தொடர்ந்தும் வலுப்பெற்று ஊக்குவிக்கப்பட வேண்டுமென்பதே அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் அயராத ஆவலாக வுள்ளது. ஏனைய பாடங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் விழுமிக்கல்விக்கும் கொடுக்கப்பட வேண்டும். நவீன டிஜிட்டல் யுகத்தில் வாழும் இக்கால மாணவர்கள் பண்பான வாழ்வு வாழ்வதற்கு விழுமியக்கல்வி இன்றியமையாதாகும்.

அருட்சகோதரி ஞா.பவளராணி(அ.கா)



### கல்லூரிகள்

திருகோணமலையில் புனித மரியாள் கல்லூரியில் தம் கல்விப்பணியினை ஆரம் பித்தவர்கள் இன்று இலங்கையில் பல மாவட் டங்களில் அருட்சகோதரிகள் அதிபர்களாக இருந்து பாடசாலை நிர்வாகம் செய்து வருகின்ற னர். வேறு சிலர் பல அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். கிறிஸ்தவ விழுமியங்களை சமயக்கல்வி மூலமாகவும் ஏனைய கல்வி நடவடிக்கை கள், தொடர்பாடல்கள், பல்வேறு நிகழ்வுகள் மூலம் மாணவர்கள் உள்ளங்களில் விதைத்து, சமு தாயத்தில் ஒழுக்கமுள்ள, பொறுப்புள்ள, கடமையுணர்ச்சியுள்ள இறை நம்பிக்கையுள்ளவர்களாக வாழ அவர்களைத் தயார்படுத்துகின்றனர். பல்வேறு தொழில்களை நிர்வாகத் திறமை யுடன் முன்னோக்கி நடாத்திச் செல்லவும், பல்கலைக்கழகங்களில், கல்வியியற் கல்லூரிகளில் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரியானவர்களாக வாழவும் தயார்படுத்தப்படுவதில் அருட் சகோதரிகள் தம் பணியைச் செய்து வருகின்றனர். எதிர்காலக் குடும்பங்களில் பொறுப்பான தலைவிகளாக எதிர்கால சந்ததியினை வழிநடத்தவும், சமூகத்தில் இன, மத, மொழி வேறு பாடின்றி அனைவருடனும் வாழப்பழகவும், பாடசாலைகளில் ஏற்ற சூழ்நிலையினை உருவாக்கிக் கொடுக்கின்றனர்.

### யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

இலங்கையில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் தம் பணியை ஆரம்பித்த தன் நூற்றாண்டு விழாவை இவ்வாண்டில் கொண்டாடுகின்றனர். கடந்த காலங்களில் இறைவன் இச்சபையின் அருட்சகோதரிகள் வழியாக இலங்கைத் திருஅவைக்கு வழங்கிய அனைத்து நன்மைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.



புனித சூசையப்பரின் குளுனி அருட் சகோதரிகள் விட்டுச் சென்ற நற்பணிகளைப் பொறுப்பேற்க இந்தியாவி லிருந்து வருகை தந்தவர்களே இக் கார்மேல் சபைச் சகோத-ரிகள்.

இன்று இலங்கைத் திருஅவையில் கல்விப் பணி யில் இச் சபையின் சகோதரிகளின் பணி கோடிட்டிக்காட்டப் பட வேண்டியதொன்றாகும். தமக்கென பெண்கள் நவசந்நியாசிகளை உருவாக்கும் நிலையங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றனர். உயிரூட்டமும், உற்சாகமும் உள்ள சகோதரிகள் இன்று இலங்கையில் தம் பணியினை வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தாது, பல்வேறுபட்ட துறைகளிலும் சேவையினை விரிவு படுத்தியுள்ளனர். பாலர் பராமரிப்பு நிலையங்களில் சிறுவர்களையும், தேயிலைத் தோட்டங்களி லுள்ள மாணவர்களையும், முள்பள்ளிச் சிறுவர்களையும், சிறையில் வாடும் உள்ளங் களையும், கைவிடப்பட்ட முதியோர்களையும் கருணை இல்லத்தில் அன்புடன் வழிநடத்தி வருகின்றனர். இச் சபைச்சகோதரிகள் கடந்த காலங்களில் பல்வேறு தேவையுள்ள பெண்களுக்கு சங்கீதம், தையல் பயிற்சி, தோட்ட வேலை போன்ற வற்றிலும் பயிற்சி கொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மூதூர், லுனுகல, சொறிக்கல்முனை, தேத்தாப்பளை போன்ற இடங்களில் அவர்கள் பணி தனித்துவமானது. பல பங்குகளில் மறையாசிரிகர்களாக மறைப்பணியில் பணியாற்றுகின்றனர். புனித பவுல் கூறியது போன்று அனைத்து மக்களுக்கும் எல்லாமாக வாழ்ந்து தமது ஆற்றல்கள், திறமைக்கேற்ப பணியாற்றத் தவற வில்லை. கார்மேல் மாதாவின் பரிந்துரை இச் சபையில் உள்ள அனைத்து சகோத ரிகளுக்கும் கிடைக்க ஆசித்து என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைக் கூறிநின்கின்றேன்.

பேரருட்கலாந்தி யஸ்ரின் ஞானப்பிரகாசம்

### முன்பள்ளிப் பாடசாலைகள்

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்" என்ற கூற்றிற் கேற்ப இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதற் கிணங்க சிறுவர்களை சிறுபராயத்திலிருந்தே நற்பண்புகளு டன் வாழப்பழக்க முன்பள்ளிப் பாடசாலைகள் உதவுகின்றன. எமது அருட்சகோதரிகள் முன்பள்ளிக் கல்வி நெறியில் தகைமை பெற பல்வேறுபட்ட பாடநெறிகளை நிறைவுசெய்து தம்மைத் தயார்படுத்து கின்றனர். ஆங்கில மொழியிலும் பல கவிதை, பாடல்கள் போன்ற வற்றை கற்பிக்கின்றனர். பலவித கைவேலைகள், விளையாட்டுக் கள் மூலம் தமது திறமைகளைத் தெரிந்து கொண்டு அதனை வளர்க்கவும் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். முதற் தடவையாகக் குடும்ப சூழலி லிருந்து வருகை தரும் சிறார்களைப் பலருடன் பழகி ஒன்றாக வாழ அவர்கள் பழக்கப்படுத்தப்படு கின்றனர். இறை நம்பிக்கையில் வாழவும் செபிக்கவும் அவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்ற னர். அவர்களை, கலைநிகழ்வில் தம் திற மைகளைப் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் வெளிப்படுத்தி (தொடர்ச்சி 6ம் பக்கம்)





# காவலன் கலசம்

தன்னம்பிக்கையுடன் வாழ்வைத் தொடர்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றனர். பிள்ளைகளை மூலம் பெற்றோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி நல்ல விழுமியங்களை குடும்ப வாழ்விலும் விதைக்கின்றனர்.

**பங்குத்தளங்களில் பணி**

கிறிஸ்து தன் மூன்று வருடப்பணிக்காலத்தில் மக்களுடன் நெருங்கிய உறவை பேணினார். அவ்வரின் தேவைகளை அறிந்து இறைவார்த்தைகள் மூலம் அவர்களின் உள்ளங்களை இறைவன்பக்கம் திருப்ப முயன்றார். அவர் பணி தொடரும் எம் பணியும். பங்குத்தளங்களில் பலதரப்பட்ட மக்களுடன் இறைவார்த்தையைப் பகிரவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பிள்ளைகளுக்கு மறைக்கல்வி கற்பித்தும், அருட்சாதனங்களைப் பெற அவர்களை தயார்ப்படுத்துதலும் மிகவும் முக்கியமாக இருக்கின்றது. இளைஞர்களை வழிநடத்தல், குடும்பங்களை தரிசித்து, அவர்களின் பிரச்சினைகளின் போது வழிகாட்டுவது, நோயுற்றோர் வயது போனவர்களுக்கு நற்கருணை வழங்கல் போன்றனவற்றை செய்வதும் பணியின் ஒரு பகுதியாக உள்ளது. பொருளாதாரக் கஷ்டங்களினால் கஷ்டப்படும் குடும்பங்களுக்கு தேவையான போது உதவி வழங்கி அவர்களின் கண்ணீர் துடைப்பதும் கிறிஸ்துவின் கருணைச் செயற்பாட்டை வெளிப்படுத்துகின்றது." அன்பியக் கூட்டங்களை நடாத்தி, பல குடும்பங்களை ஒன்றிணைத்து இறைவார்த்தை பகிர்தலை ஊக்கப்படுத்தி குடும்பங்களிடையே இறைவிசுவாசத்தை ஆழப்படுத்துவதும் எமது பணியாக உள்ளது.

**பெண்கள் இல்லங்கள்**

இலங்கையின் வரலாற்றில் பல்வேறு காலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், உள்நாட்டுப் போர்களினால் குடும்பங்களை பிரிந்த, பெற்றோர்களை இழந்த பல சிறுவர்களை விஷேடமாக பெண்கள் இல்லங்களில் பராமரித்து அவர்களது உடல், உள, அறிவு தேவையினை நிறைவு செய்தல், உடைந்த உள்ளங்களை குணப்படுத்த ஆறுதல்படுத்தி அவர்களை சமுதாயத்தில் இறைபண்புகள் நிறைந்தவர்களாக வாழத் தயார்படுத்துதல். சுனாமி, நீண்டகால இனப்போர் காரணமாக துன்பியல் அனுபவங்களைப் பெற்ற இவர்கள் படிப்படியாக மறந்து எல்லோருடனும் ஒன்றாக வாழக் கற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. முறையான கல்வியினைப் பெறுவதற்கு, பாடசாலைகளில் கல்வி கற்க வசதி செய்து கொடுக்கப்படுகின்றது. தமது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள வழி சமைத்துக் கொடுக்கப்படுகின்றது. எம் அன்னை வெரோனிக்காவின் முக்கிய நோக்காக இருந்த இளம்பெண்களை வழிகாட்டல் எனும் எண்ணக்கருவினை இதன்மூலம் நாம் நிறைவு செய்ய அருட்சகோதரிகள் விழைகின்றார்கள்.

**பெண்கள் விடுதிகள்**

சிறந்த கல்லூரிகளில் கல்வி கற்கவும் புலமைப்பரிசில் பெற்ற மாணவிகள் கல்வியினைத் தொடரவும் மாணவிகள் பல பாடசாலைகளில் இருந்து விடுதி




களில் தங்கி கல்வியை மேற்கொள்ள வருவது வழக்கம் எனவே எமது கல்லூரிகளிலும் கன்னியர் இல்லங்களிலும் பெண்களுக்கான விடுதிகள் அமைக்கப்பட்டு அருட்சகோதரிகளினால் வழிநடத்தப்படுகின்றனர். விடுதிகளில்ஒருமுறையானநேரசூசிவிளையாட்டுக்கள்,ஒன்றாக செபித்தல், வாழ்தல் மூலம் அவர்கள் ஞான அறிவிலும் தேவபக்தியிலும், முழுமையான வளர்ச்சி பெற வாய்ப்பு கிடைக்கின்றது. பல குடும்பங்களிலிருந்து பல்வேறுபட்ட சூழல்களிலிருந்து வரும் மாணவிகளுடன் ஒன்றாக வாழ்வதனால் பிற்காலத்தில் சமூகத்தில் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இக்காலத்தில் பெண்கள் பலர் வேலை தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதனால் தம் பிள்ளைகளை விடுதியில் சேர்க்கின்றார்கள். எனவே அவர்களுக்கு உதவி வழங்கவும், வீட்டில் பாதுகாப்பு நலன் கருதி, வளர்ந்த பெண்களை அருட்சகோதரிகளிடம் ஒப்படைப்பதனால் அவர்களைப் பாதுகாக்கவும் பெண்கள் விடுதி அருட்சகோதரிகளினால் நடாத்தப்படுகின்றது.

**பாலர் நிலையம்**

கொழும்பில் வறுமைக் கோட்டில் வாழும் பெண்கள் தம் வறுமையைப் போக்கவும், குடும்பத்தினை பராமரிக்கவும் நாளாந்த கூலி வேலைக்கு செல்கின்றனர்.



தங்களது சிறு பிள்ளைகளை காலையிலிருந்து மாலை வரை பாதுகாப்பாக வைத்திருக்கவும். அவர்களைப் பராமரிக்கவும் பாலர் நிலையத்தில் அருட்சகோதரிகளின் பொறுப்பில் விட்டுச்செல்கின்றனர். மூன்று வயதில் இருந்து 5 வயது வரை உள்ள பாலர்களை பராமரிக்க கொழும்பு 9 இல் உள்ள வளர்த்த முல்லையில் பாலர் நிலையம் பல வருடங்களாக நடாத்தப்படுகின்றது. அருட்சகோதரிகள் இச் சிறுவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து பராமரிக்கின்றார்கள். உள்நாட்டு வெளிநாட்டு உதவியாளர்கள் பலரின் நன்கொடையுடன் வெகு திறமையாக அருட்சகோதரிகள் இப்பணியினைச் செய்து வருகின்றனர். பல பெண்களுக்கும் வேலை வாய்ப்பி



னைக் கொடுத்து இதனை பெற்றோர்கள் சந்தோஷமும் திருப்தியும் அடையும் வகையில் செய்து வருகின்றனர்.

அவர்களை பாடசாலைக்கு செல்வதற்கு தயார்படுத்த கல்வியறிவும் அவர்களுக்கு அருட்சகோதரிகளால் வழங்கப்படுகின்றது.

**கருணை இல்லம்**

தற்கால நவீன உலகில் குடும்ப உறவு பாசம் குறைந்து போகும் வேளை தம்மைப் பெற்றவர்களை அவர்களது முதிர் வயதில் ஒரு பாரமாக கருதுகின்றார்கள். பணம் படைத்தவர்கள் அவர்களை முதியோர் இல்லத்தில் பராமரித்து வருகின்றனர். கைவிடப்பட்ட முதியோர்களைபராமரிப்பதற்காகபுனித அன்னை தெரேசாவினால் கொழும்பு மாதம்பிட்டியாவில் கருணை இல்லம் 1968ல் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருட சேவையின் பின்னர் அவர்களால் தொடரமுடியாத நிலையில் அப். கார்மேல் அருட்சகோதரிகள் அதனைப் பொறுப்பேற்றி நடாத்தி வருகின்றனர். இவ்வில்லமானது இன, மத, மொழி, சாதி வேறுபாடின்றி கைவிடப்பட்ட முதியோர்களை பராமரிக்கும் பணியினை அருட்சகோதரிகள் அர்ப்பணிப்புடன் ஆற்றி வருகின்றனர். அனைவரையும் பாதுகாத்துவரும் இறைவனில், முழு நம்பிக்கை வைத்து அருட்சகோதரிகள் அவரில் தங்கி வாழ, தம்மை அர்ப் பணித்துள்ளனர். இவ்வில்லத்தில் ஏறக்குறைய 60 ஆண், பெண் முதியோர்கள் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் வேண்டிய உணவு, உடை, உடல் நல வசதிகள் தங்குமிடம் போன்ற அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன. சிற்றாலயம் அமைக்கப்பட்டு அவர்கள் செபிக்கவும், திருப்பலியில் பங்குபற்றவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒன்றாக இருந்து பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், ஆரோக்கியபயிற்சிகள் பெற, வசதி வழங்கப்படுகின்றது. இறுதி காலத்தில் துன்பங்களை மறந்து சந்தோஷமாக வாழ இது பெரிதும் உதவியாக இருப்பதுடன், அவர்களுக்கு மரணம் நேரிடும் போது அவர்களை மத சடங்குகளுடன் நல்லடக்கம் செய்கின்றது.

**தேயிலைத் தோட்டங்களில் பணி**

மத்திய மலைநாட்டில் புசல்லாவை, பூண்டு லோயா, பதுளை, பண்டாரவளை, லுணுகல போன்ற இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களிலுல் மக்களுக்கு பலவகையிலான பணிகளை அருட்சகோதரிகள் செய்து வருகின்றனர். தோட்டங்களிலுள்ள வீடுகளைத் தரிசித்து வழிபாடுகள் நடைபெறும் போது பங்குத் தந்தைக்கு உதவியாக இருப்பதுடன் அவர்களை தயார் செய்தல். மறைக்கல்வி கற்பிப்பதுடன் அருட்சாதனங்களுக்கு பிள்ளைகளைத் தயார்படுத்தல் போன்றவற்றை செய்து வருகின்றனர்.

வெவ்வேறு பங்குகளிலுள்ள கல்வி கற்கக்கூடிய திறமையாக மாணவர்களை தெரிந்து பங்குத் தந்தையின் நற்சான்றிதலுடன், கத்தோலிக்க மாணவர்களுக்கு விடுதியில் சேர்த்து நல்ல பாடசாலைகளில் கல்வியினை மேற்கொள்ள புனித பேதுரு இல்லம் பூண்டுலோயாவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தி அவர்கள் பலரை கல்வியற் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி இன்று பலர் ஆசிரியர்களாகவும் வேறு பல துறைகளிலும் பணியாற்றுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அப்.கார்மேல் அருட்சகோதரிகள் காலத்தின் தேவையை அறிந்து இறைமகன் இயேசுவின் பணியை பல்வேறு வழிகளில் கடந்த நூறு ஆண்டுகளாக பணி புரிந்து வருகின்றனர். இதுவரை காலமும் வழிநடத்தி எம்முடன் பயணம் செய்த இறைவன் எதிர்காலத்திலும் எம்முடன் இருந்து வழிநடத்த வேண்டி நிற்கின்றோம். எமது இப்பயணத்தில் எமக்கு பல வழிகளிலும் உதவி செய்த ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுமக்கள் யாவருக்கும் எம் மனமார்ந்த நன்றியினைக் கூறுகின்றோம்.

குருத்துவப் பணிவாழ்வின்
வெள்ளிவிழா நாயகன்






குருத்துவப் பணிவாழ்வில்
வெள்ளிவிழாக் காணும்
அருட்பணி
தியோகுப்பிள்ளை ஆசைநாதன் (OSB)
அடிகளார்.

இவர் கிளாலி மண்ணிலே தியோகுப்பிள்ளை
பிலோமினாவின் கடைசி மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைக்
கிளாலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் இடைநிலைக்
கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் உயர்தரக்
கல்வியைக் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும் கற்றார்.
புனித ஆசீர்வாதப்பர் சபையில் 1988ஆம் ஆண்டு சேர்ந்து மெய்யியல்
மற்றும் இறையியல் முடித்து 11.01.1997 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
இவர் தனது மேற்படிப்பை இத்தாலியிலுள்ள உரோமையில் மேற்கொண்டு
திருவழிபாடுத் துறையில் பட்டதாரியாகவும் கத்தோலிக்க திருஅவையில்
'திரு இசையில்' டிப்ளோமாதாரியாகவும் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் புத்தளம்,
வஹகோட்ட, கடுகஸ்தோட்ட போன்ற இடங்களைப் பணித்தளங்களாகக் கொண்டு
பணிபுரிந்தமையுடன் அருட்சகோதரர்களைக் குருத்துவத்துக்கு ஆயத்தம் செய்யும்
பணியுடன் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகவும்
பணியாற்றுகின்றார். தற்போது இலங்கையின் திருவழிபாட்டு ஆணைக்குழுவில்
தேசிய இயக்குனராகவும் பணியாற்றுகிறார். இவரது குருத்துவப் பணிவாழ்வு
மென்மேலும் சிறப்புற்று விளங்கவும், நீண்ட ஆயுள் பலத்துடன்
வாழவேண்டுமென்றும்
வெள்ளிவிழா நாயகனை வாழ்த்துவதோடு
இறைவனைப் பிரார்த்தித்தும் நிற்கின்றோம்.

குடும்பத்தினர்

AD- 14

# கூட்டொருங்கியக்க வினாக்கொத்து

**அன்பான பாதுகாவலன் வாசகர்களே!**

*கூட்டொருங்கியக்க திருஅவை பற்றிய வினாக்கொத்துக் கீழே தரப்பட்டுள்ளது. இவற்றில் எல்லா வினாக்களுக்குமோ அல்லது நீங்கள் பதில் அளிக்க விரும்பும் குறிப்பிட்ட வினாக்களுக்கோ உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பவும். தயவு செய்து தேவைப்படின் பிறிதொரு தாளில் வினா இலக்கத்தையும் வினாவையும் எழுதி உங்கள் கருத்துக்களைப் பதிவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு பெப்ரவரி மாதம் 25ம் திகதிக்கு முன்னர் அஞ்சல் செய்யவும்.*

அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம்
குருமுதல்வர், ஆயர் இல்லம்,
தபால்பெட்டி இல: 2, யாழ்ப்பாணம்.

பதிலளிப்பவராகிய உங்கள் பற்றிய தகவல்கள்

பெயர் (விரும்பினால்) :- ------------------------------------------------------

பங்கு / ஆலயம் :- ------------------------------------------------------

அன்பியம் / வலயம் :- ------------------------------------------------------

நிலை: :- பொதுநிலையினர் / துறவுநிலையினர் / திருநிலையினர்

வயது :- ------------------------------------------------

தொழில் :- ------------------------------------------------

*குறிப்பு: தனியாகவோ குழுவாகவோ இவ்வினாக்கொத்தைப் பயன்படுத்தும் பொழுது விடைகளுக்குத் தரப்பட்ட இடம் போதவில்லை என்றால் மேலதிக தாள்களில் வினா இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு விடைகளை எழுதி வினாக்கொத்துடன் இணைத்து சமர்ப்பிக்கலாம்.*

திரு அவை வாழ்விலும் பணியிலும் உமது பங்கேற்பு எவ்வாறு உள்ளது? ( )
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

குழுவாகக் கலந்துரையாடிப் பதிலளிப்பின் குழு :- ----------------------------------

**1. கூட்டொருங்கியக்கப் பயணத் தோழர்கள்**
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

1.1 பின்வருவோர் பங்குப் பணிகளில் எவ்வாறு இணைந்து செயற்படுகின்றனர்?
- பங்குத்தந்தை ( )
- அருட்சகோதரிகள் ( )
- மேய்ப்புப்பணிப் பேரவையினர் ( )
- பக்திச் சபையினரும் ஏனைய அமைப்புக்களும்
  - மரியாயின் சேனை ( )
  - விசென்ட் டி போல் சபை ( )
  - பாடகர் குழாம் ( )
  - மறையாசிரியர் ( )
  - இளையோர் மன்றம் ( )
  - பீடப்பணியாளர் ( )
  - திருப்பாலத்துவ சபை ( )

1.2. பின்வருவோர் மறைமாவட்டப் பணிகளில் எவ்வாறு இணைந்து செயற்படுகின்றனர்?
- ஆயர் ( )
- குருக்கள் ( )
- துறவிகள் ( )
- பொதுநிலையினர் ( )

1.3. பங்குப்பணிகளில் இணையாதோர் / ஒதுங்கியிருப்போர் யார்? என்ன காரணம்?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

1.4 பங்குப்பணிகளில் ஓரங்கட்டப்படுவோர் / ஒதுக்கப்படுவோர் யார்? என்ன காரணம்?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

1.5 மறைமாவட்டப் பணிகளில் இணையாதோர் / ஒதுங்கியிருப்போர் யார்? என்ன காரணம்?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

1.6 மறைமாவட்டப் பணிகளில் ஓரங்கட்டப்படுவோர் / ஒதுக்கப்படுவோர் யார்? என்ன காரணம்?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

1.7 இணைந்து பயணிப்போர் தொடர்பான உங்கள் மேலதிகக் கருத்துக்கள்:

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

**2. வெவ்வேறு நிலையில் உள்ளோரின் கருத்துக்கள் எவ்வாறு செவி மடுக்கப்படுகிறது?**
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

2.1 எமது பங்குத்தளங்களில் பின்வருவோரின் கருத்துக்கள் எவ்வாறு செவி மடுக்கப்படுகின்றன
- பொதுநிலையினர் ( )
- இளைஞர் ( )
- பெண்கள் ( )
- ஏழைகள், ஒதுக்கப்பட்டோர் ( )

2.2 மறைமாவட்ட மட்டத்தில் பின்வருவோரின் கருத்துக்கள் எவ்வாறு செவி மடுக்கப்படுகின்றன?
- ஆயர் ( )
- குருக்கள் ( )
- துறவிகள் ( )
- பொதுநிலையினர் ( )

2.3 உங்கள் விடைக்கான காரணங்களைக் கூறுக?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

2.4 பங்குப் பணிகளில் காலத்தின் குறிகள் செவிமடுக்கப்படுகின்றனவா? ( )
2.5 மறைமாவட்டப் பணிகளில் காலத்தின் குறிகள் செவிமடுக்கப்படுகின்றனவா? ( )
2.6 செவிமடுத்தல் பற்றிய உங்கள் மேலதிக அவதானிப்புக்கள் :

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

**3. வெளிப்படையாகக் கருத்துக்களை வெளியிடல் / பேசுதல்**
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

3.1 பங்கில் உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய சூழல் காணப்படுகிறதா? ( )

3.2 உங்கள் பதிலுக்கான காரணங்கள்:

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

3.3 மறைமாவட்டத்தில் உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய சூழல் காணப்படுகிறதா? ( )

3.4 உங்கள் பதிலுக்கான காரணங்கள்:

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

3.5 சமுதாயத்தில் நிலவும் தீமைகள் தொடர்பாகத் திருஅவை கருத்துரைக்கிறதா? ( )
3.6 பொது ஊடகங்களில் திருஅவையின் கருத்துக்கள் எவ்வாறு வெளிப்படுத்தப் படுகிறது? ( )

3.7 சுதந்திரமான கருத்துவெளிப்பாடு பற்றிய உங்களது மேலதிக கருத்துக்கள்:

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

**4. திருவழிபாட்டுக் கொண்டாட்டம்**
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

4.1 கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிக்க, திருவழிபாடு எவ்வாறு உதவுகிறது? ( )

4.2 உங்கள் பதிலுக்கான காரணங்கள் எவை?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

4.3 திருவழிபாட்டில் பொதுநிலையினரின் செயற்பாட்டோடு கூடிய பங்கேற்பு எவ்வாறு உள்ளது? ( )

4.4 உங்கள் பதிலுக்கான காரணங்கள் எவை?

4.5 செபங்களும் வழிபாடுகளும் சமூகத்தில் உங்கள் வாழ்வையும் பணியையும் எவ்வளவு தூரம் மேம்படுத்துகின்றன? ( )

4.6 கூட்டொருங்கியக்கத் திருஅவையைக் கட்டியெழுப்புவதாய் திருவழிபாடு அமைய உங்கள் ஆலோசனைகள்

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

4.7 வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் பற்றிய மேலதிகக் கருத்துக்கள்:

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

**5. மறைப்பணியில் கூட்டுப் பொறுப்பு**
அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

*தொடர்ச்சி மறுபக்கத்தில்...*

# காவலன் கலசம்

5.1 மறைப்பணியில் முழுத் திருஅவைக்கும் கூட்டுப்பொறுப்பு உள்ளது என்ற விழிப்புணர்வு காணப்படுகிறதா? ( )

5.2 பொதுநிலையினராக / திருநிலையினராக / துறவியாக திருஅவையின் மறைப்பணியில் உங்கள் பங்கேற்பு எவ்வாறு உள்ளது? ( )

5.3 பங்கிலோ மறைமாவட்டத்திலோ நீங்கள் பங்கேற்கும் பொறுப்புக்களைக் குறிப்பிடுக:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

5.4 மறைப்பணியில் கூட்டுப் பொறுப்புப்பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

**6. திருஅவைக்குள்ளும் சமுதாயத்துடனும் உரையாடல்**

அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

6.1 பங்கிலுள்ள சிக்கல்களையும் முரண்பாடுகளையும் உரையாடல் வழியாகத் தீர்த்துக் கொள்ளும் பொறிமுறை எவ்வாறு உள்ளது? ( )

6.2 உங்கள் விடைக்கான காரணங்களைத் தருக?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6.3 பங்கிலுள்ள கருத்துப் பரிமாற்றத்துக்கான களங்கள் எவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6.4 அவற்றில் உரையாடல் ஃ கருத்துப் பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது? ( )

6.5 மறைமாவட்டத்திலுள்ள கருத்துப் பரிமாற்றத்துக்கான களங்கள் எவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6.6 அவற்றில் உரையாடல் / கருத்துப் பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது? ( )

6.7 சமூகமட்டப் பொது அமைப்புகளுடனான உறவு / உரையாடல் எவ்வாறு உள்ளது? ( )

6.8 ஏனைய சமயங்களுடனான உறவு / உரையாடல் எவ்வாறு உள்ளது? ( )

6.9 அரச நிர்வாக அதிகாரிகளுடனான உறவு / உரையாடல் எவ்வாறு உள்ளது? ( )

6.10 உரையாடல் / உறவு பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

**7. ஏனைய கிறிஸ்தவ சபைகளுடனும் ஏனைய சமயங்களுடனுமான உரையாடல்**

அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

7.1 பங்கு மட்டத்தில் ஏனைய கிறிஸ்தவ சபைகளோடு உரையாடல் முயற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன? ( )

7.2 எத்தகைய முயற்சிகள் இடம்பெறுகின்றன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7.3 பங்கு மட்டத்தில் ஏனைய சமயங்களோடு உரையாடல் முயற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன? ( )

7.4 எத்தகைய முயற்சிகள் இடம்பெறுகின்றன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7.5 மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள் எவ்வாறு காணப்படுகின்றன? ( )

7.6 எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7.7 மறைமாவட்ட சமயங்களுடனான உரையாடல் முயற்சிகள் எவ்வாறு காணப் படுகின்றன? ( )

7.8 எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

**8. அதிகாரமும் பங்கேற்பும்**

அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

8.1 பங்கில் பங்கேற்பு அமைப்புக்கள் எவ்வாறு இயங்குகின்றன?

மேய்ப்புப் பணிப் பேரவை ( )
பக்திச் சபைகள் ( )
இளையோர் அமைப்புக்கள் ( )
அன்பியங்கள் ( )

8.2 மறைமாவட்ட பங்கேற்கும் அமைப்புக்கள் எவ்வாறு இயங்குகின்றன?

மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை ( )
மறைக்கோட்ட மேய்ப்புப்பணி பேரவைகள் ( )
மரியாயின் சேனை ( )
வின்சென்ற் டி போல் சபை ( )
குருக்கள் மன்றம் ( )
மறைமாவட்ட ஆணைக்குழுக்கள் ( )

8.3 ஆணைக்குழுக்கள் / ஏனைய அமைப்புக்கள் பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

8.4 பங்கில் அதிகாரம் மக்கள் மைய நோக்கில் / மனிதாபிமானத்தோடு பிரயோகிக்கப்படுகிறதா? ( )

8.5 இல்லையாயின் யார், எப்படி, தவறாகப் பயன்படுத்துகிறார்களெனக் குறிப்பிடவும்:

8.6 மறைமாவட்டத்தில் அதிகாரம் மக்கள் மைய நோக்கில் / மனிதாபிமானத்தோடு பிரயோகிக்கப்படுகிறதா? ( )

8.7 இல்லையாயின் யார், எப்படி, தவறாகப் பயன்படுத்துகிறார்களெனக் குறிப்பிடவும்

8.8 அதிகாரம் பங்கேற்புப் பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

-

**9. தேர்ந்து தெளிதலும் தீர்மானித்தலும்**

அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

9.1 பங்கு மட்டத் தீர்மானங்கள் இறைவேண்டல் சூழமைவில் தூய ஆவியாரின் பிரசன்னத்தில் எடுக்கப்படுகிறதா? ( )

9.2 பங்குமட்டத் தீர்மானங்கள் எடுக்கப்படுமுன் போதிய கலந்துரையாடல் மேற் கொள்ளப்படுகின்றதா? ( )

9.3 மறைமாவட்டத் தீர்மானங்கள் இறைவேண்டல் சூழமைவில் தூய ஆவியாரின் பிரசன்னத்தில் எடுக்கப்படுகிறதா? ( )

9.4 மறைமாவட்டத் தீர்மானங்கள் எடுக்கப்படுமுன் போதிய கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றதா? ( )

9.5 தேர்ந்து தெளிதல் தீர்மானித்தல் பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

**10. எம்மைக் கூட்டொருங்கியக்கமாக உருவாக்குதல்**

அ. சிறப்பாக ஆ. ஓரளவு இ. குறைவு ஈ. இல்லை

10.1 ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான பயிற்சிகள் எவ்வளவு செயற்திறனாக வழங்கப்படுகின்றன? ( )

10.2 பங்கு மட்டப் பயிற்சிகள் ( )

10.3 மறைமாவட்ட மட்டப் பயிற்சிகள் ( )

10.4 பயிற்சிகளைக் குறிப்பிடவும்

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

10.5 எத்தகைய பயிற்சிகள் வழங்கப்படலாம்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

10.6 பயிற்சிகள் யார் யாருக்கு வழங்கப்பட வேண்டும்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

10.7 அன்பியங்கள் எவ்வாறு கூட்டொருங்கியக்கத்துக்குத் துணையாக இருக்கின்றன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

10.8 கூட்டொருங்கியக்கமாக உருவாதல் பற்றிய மேலதிக கருத்துக்கள்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------



# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

சபை முதல்வர்களால் மெய்யியல், இறையியல் கற்பதற்கு உரோமுக்கு 1926இல் அ.ம.தி.களின் அனைத்துலகப் பயிற்சியகத்திற்கு அனுப்பப்பட்ட முதல் மாணவர்கள் இவர்களே. மெய்யியல், இறையியல் படிப்பின்பின் எமிலியானுஸ் பிள்ளை 1928 ஜனவரி 25இல் நித்திய வாக்குறுதியைக் கொடுத்து 1929 யூலை 04இல் அங்கேயே அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்பு ஏறக் குறைய ஒரு வருடமளவாகத் தன் சக வகுப்புத் தோழர்களின் அழைப்பை ஏற்று இத்தாலிக்கும், பிரான்சுக்கும் சென்றிருந் தார்.

**அதிபராக, இயக்குநராக**

1930.09.08இல் அருட்பணியாளராக இலங்கைக்குத் திரும்பிய போது ஆறு மாதங்கள் இவரது கீழ்ப்படிதலைப் பரிசோதிக்கும் காலமாக எந்தவித நியமனமும் இல்லாமல் யாழ். ஆயர் இல்லத்தில் தங்கியிருந்து பல அருட்பணியாளர்களுக்கு அவர்களது பணிகளில் உதவி செய்வதாக அமைந்தது. 1931 இல் அனுராதபுரம் புனித யோசேப்பு கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். 1932.07.01 - 1934.10.31வரை மாதகல் புனித யோசேப்பு மகாவித்தியாலய அதிபராகப் பணியாற்றிய போது இளவாலை புனித யாகப்பர் ஆலயப் பங்கு அருட்பணியாளர் சி. மரியாம்பிள்ளை அ.ம.தி.யிடம் அவ்வாலயப் பங்குமனையில் தங்கியிருந்து தம்மோடு இருந்த சில அருட்பணி மாணவர்களின் உருவாக்கத்திற்கும் பங்கு மனையில் பயிற்சியளித்தார். அவ்வேளை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட மகா வித்தியாலயம் போன்றவற்றில் உரிமை மறுக்கப்பட்டோரின் பிள்ளைகளின் அனுமதிக்கும், ஏனைய மாணவர்களுடனான சம ஆசன அமர்தலுக்கும், சம கற்றல் செயற்பாடுகளுக்கும் இவரது முயற்சியால் அனுமதி கிடைத்தது. இம்முயற்சியை இன்றும் இளவாலையின் உரிமை மறுக்கப்பட்டோர் பாராட்டிப் பெருமைப்படு கின்றனர். 1934 - 1935வரை மாதகல் பங்கு அருட்பணியாளராகவும் பணியாற்றினார்.

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இவரையே 1935இல் முதல் அருட்பணி இயக்குநராகப் பெற்றது. அங்கு இவர் 1937வரை மறைக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். அருகில் இருந்த புனித யோசேப்பு முதியோர் இல்லம், புனித யோசேப்பு தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றிற்கும் பொறுப்பாகவும் பாஷையூர்ப் பங்கு அருட்பணியாளராகவும் கடமை புரிந்தார். அத்தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிக்கும் வேலைக்கும் சேர்ந்த மாணவர்களின் திறமை காரணமாக அவர்கள் மூலம் தென்னந்தோட்டத்தையும், வெதுப்பகத்தையும் இலாபகரமாக இயக்கி முதியோர் இல்லம், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி போன்ற நிறுவனங்கள் தன்நிறைவு காணவும், சுயமாக இயங்கவும் வழிவகுத்தார். இவரது பல்திறமை மிக்க ஆளுமையை அறிந்த ஆயர் ஜே.ஏ. கியோமர் அ.ம.தி. சுதேசமயமாக்கலை நோக்கிய தனது கால மறைமாவட்டத்தின் தேவையை உணர்ந்து இவரையே யாழ். மறைமாவட்டப் பாடசாலைகளின் முகாமையாளராக 1936இலும், யாழ். மறைமாவட்ட அருட்பணி முதல்வராக 1937இலும் நியமித்தார். இவ்விரு பணிகளையும் சம காலத்தில் 12 ஆண்டுகள் ஆற்றிய முதல் இளம் சுதேச அருட்பணியாளர் இவரே.

**பாடசாலைகளின் நிர்வாகி அருட்பணி முதல்வர்.**

இவரது காலத்தில் ஏனைய மத முகாமையாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையில் இவரது ஆளுமைத் திறமையே பாலமாக அமைந்தது. கல்வி மற்றும் ஏனைய அரச கொள்கைகள் தொடர்பான திடீர் மாற்றங்கள், சமூக மதிப்பீடுகளின் மாற்றங்கள், மக்களின் மனநிலை வேறுபாடுகள், அரசாங்க அதிகாரிகளின் இட மாற்றங்கள் போன்றவை நிர்வாகிகளின் வேலைப்பழுக்களை அதிகரித்தன. அரச நிதி வழங்கலில் இருந்த பாரபட்சத்தை, அதாவது யாழ்ப்பாணத்தில் ஏனைய பாடசாலைகள் புறக்கணிக்கப்பட ஒரு பாடசாலைக்கு மட்டும் ரூபா 50,000/= கட்டட நிதியாக ஒதுக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி ஏனைய மதப் பாடசாலைகளின் நிர்வாகிகளுடன் இணைந்து எதிர்த்துப் போராடவைத்து வெற்றியும் கண்டார்.

ஏப்ரில் 1940இல் இவரது ஏற்பாட்டில் வண்ணார்பண்ணை இந்துகலாசார மண்டபத்தில் எதிர்ப்புக்கூட்டம் இடம்பெற்றது. அதேவேளை பெப்ரவரி 1947இல் ஆயர் கியோமாரின் தலைமையில் இடம்பெற்ற எதிர்ப்புக்கூட்டத்தில் ஏனைய மதப் பேச்சாளரும் பங்குபற்றினர்.

ஐரோப்பிய மறையறிவிப்பாளர் பிரான்சிஸ் எம். பிசியன் அ.ம.தி.யின் பின்பு இவர் இப்பணியைப் பொறுப்பேற்றதால் அவருக்கு இணையாகச் சுதேசிகளாலும் பணியாற்ற முடியும் என்று நிரூபிக்க வேண்டிய தேவை இருந்தது. சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் தனியார் பாடசாலைக் கல்வியே கத்தோலிக்க சூழலைப் பாதுகாக்க வல்லது என்பதைப் பல வழிகளில் தானும் உணர்ந்து ஏனையோருக்கும் உணர்த்தியவர் இவரே. இந்த வகையில் பாடசாலைகளைத் தரிசித்து நிர்வாகச் சிக்கல்கள் கட்டட தளபாடப்பராமரிப்பு, ஆசிரியர், மாணவர்களின் குறை நிறைகள், இடமாற்றங்கள், சம்பள நிலவரங்கள், மாணவர் பெறுபேறுகள், பாடவிதான நிலைமைகள், கல்வியறிவு, மறையறிவு என்பவற்றில் பெற்றோரின் மனநிலைகளைக் கேட்டறிந்து துல்லியமான ஆலோசனைகளை வழங்குவார். அதே ஐரோப்பிய மறையறிவிப்பாளர் பிரான்சிஸ் எம். பிசியன் அ.ம.தி. ஆற்றிய பணியாகிய அருட்பணி முதல்வர் பணியும் காலத்தின் தேவைக்கேற்ப இவரிடம் வந்து சேர்ந்தாலும், கனமாக இருப்பினும் ஒன்றையொன்று இலகுவாக்கியதெனலாம். பாடசாலைகளைத் தரிசிக்கும் அதேவேளை பங்குகளையும் தரிசித்து அருட்பணியாளர்களதும் மக்களதும் குறைநிறைகளைக் கேட்டறியும் இருமுனைச் சந்தர்ப்பங்களை வழங்கியது. இவ்வாறாகத் தனியார் பாடசாலைக் கல்விப்பணியானது கத்தோலிக்க திருஅவையைப் பொறுத்த வரையில், தனது பங்கு மற்றும் மறைமாவட்டத்தில் தனது மக்கள் மட்டில், கைநழுவிப்போகாத இணைப்பைக் கொண்டிருப்பதற்குக் காரணமாக இருந்ததையும், இன்று இது கைவிடப்பட்டுச் சிதறடிக்கப்பட்டதையும் காண்கின்றோம்.

இக்காலத்தில் இவர் ஐரோப்பிய, சுதேச அருட்பணியாளர்களின் மனநிலைகள், அவர்களது தேவைகள், இடமாற்றங்கள், சுகநலன்கள், பணிநிலைமைகள் என்பவற்றை ஆழமாக அறிந்த சுதேச அருட்பணியாளர் என்ற மட்டில் ஆயர் கியோமர் அ.ம.தி.க்கு ஆலோசனை வழங்கித் துணை நின்றதால் ஐரோப்பிய பண்பாட்டு மனநிலை கொண்ட ஆயர் கியோமரின் ஆளுகையின் பின்பாதிக்காலம் சுதேச மொழி பண்பாட்டு மனநிலை கொண்டதோர் மறைமாவட்ட அருட்பணி முதல்வரால் வளம்பெற்றதெனலாம். இப்பணிகள் காரணமாக மறைமாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும், விடயங்களையும், இன்னும் பெரும்பாலானவர்களின் பரம்பரைகள் பின்னணிகளையும் மிகவும் உன்னிப்பாகத் தெரிந்து வைத்திருந்தார்.

எனவே தான் தன்னை எவர் எப்பங்கிலிருந்து அணுகினாலும் அவர்களுக்கேற்ப செயலாற்றவும் அவர்களைத் தனக்கேற்ப செயற்படவைக்கவும் கூடிய விவேகமும், நுண்மதியும், தூரநோக்கும் கொண்ட காலத்தின் பணியாளராகவும் மதிநுட்ப ஆலோசனையாளராகவும் பணியாற்ற முடிந்தது. ஆயர் கியோமர் மருத்துவ விடுமுறைக்கு ஐரோப்பா சென்று திரும்பும் வரைக்கும் ஒகஸ்ட் 1945 - நவம்பர் 1946வரை யாழ் மறைமாவட்டத்தை இவரே நிர்வகித்தார். 1946 யூலை மடுத்திருப்பதி விழாவைச் சிறப்பிக்க தனது வகுப்புத் தோழரும் நண்பருமான கொழும்பு மறைமாவட்ட இணைப்பேராயர் கலாநிதி பெஞ்சமின் தோமஸ் கூறே அ.ம.தி.யை அழைத்தார். அவரும் விழாவிற்கு தலைமைதாங்கிச் சிங்களத்தில் மறையுரையாற்றினார். 1939 இல் ஆரம்பமான இரண்டாம் உலகப் போரின் ஒருவருடத்தாக்கங்கள் இலங்கையில் ஏற்படுத்திய அச்சங்கள் பொருளாதாரத் தடைகளின் பின்பு 1946இல் நிகழ்ந்த மேற்படி விழாவில் 50,000 இற்கு மேற்பட்ட யாத்திரிகள் பங்குபற்றினர். இவர்களின் தேவைகளைக் கவனிக்க முப்பது அருட்பணியாளர்கள் இவரது தலைமையில் பணியாற்றினர். மேலும் இவரது அழைப்பையேற்று சிலாபம் மறைமாவட்ட ஆயர் எட்மன்ட் பீரீஸ் அ.ம.தி. 1946 ஒகஸ்ட் திருவிழாவில் தலைமைதாங்கி மறையுரையாற்றினார். 30,000 வரையான யாத்திரிகர்களும் இருபத்து மூன்று அருட்பணியாளர்களும் பங்குபற்றினர்.

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

**பொறுப்பேற்கும் உரிமையுடன் இணை ஆயர்.**

1949 ஜனவரி 16இல் ஆயர் கியோமார் இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆயர் பணியை நிறைவு செய்த போது மறுநாள் அவருக்கான வெள்ளி விழா இடம் பெற்றது. ஏற்கெனவே இவர் உரோமிடம் விண்ணப்பித்திருந்தபடி 1949 மார்ச் 11 இல் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. மறைமாவட்டத்தைப் பெறுப்பேற்கும் வழிவரும் உரிமையுடன் உரோம் தலைமைப்பீடத்தால் நியமனம் பெற்றார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் குறுகிய கால அதிபராக 1949 ஜனவரி - மார்ச் வரை இருந்த போது இது இடம் பெற்றது. ஏனைய இரு ஆயர்களின் அதாவது காலி மறைமாவட்ட ஆயர் என். எம். லவுடாடியோ யே.ச., சிலாப மறைமாவட்ட ஆயர் எட்மன்ட் பீரிஸ் அ.ம.தி. என்போரின் துணையுடன் முற்றுப் பெறாத நிலையில் இருந்த யாழ். பேராலயத்தில் ஆயர் கியோமர் அ.ம.தி. திருநிலைப்படுத்தல் திருப்பலியை 1949 மே 22இல் நிறைவேற்றினார். ஞாயிறு தினமாகிய அன்று இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல துறைகளிலிருந்தும் பல்வேறு தரப்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

1950 ஆகஸ்ட் 25இல் அருட்பணியாளர்களுக்கான வருடாந்தத் தியான இறுதிநாள் மதிய உணவு வேளையில் அருட்பணியாளர்கள் மத்தியில் "யாழ். மறைமாவட்டத்தை, ஆயர் எமிலியானுஸ் பிள்ளை பொறுப்பேற்கின்றார்" என்று ஆயர் கியோமர் அறிவித்தவுடனே, ஜே.எவ். சேவியர் அ.ம.தி., கியோமருக்கு நன்றி கூறினார். உடனே பேராலய மணிகள் முதல் சுதேச தமிழ் அ.ம.தி. ஆயரின் வரவின் செய்தியை மறைமாவட்ட மக்களுக்கு அறிவித்தன. 'கடந்து செல்லும் வரலாற்றின்' ஐரோப்பிய இறுதி யாழ். ஆயர் கியோமரின் 26 ஆண்டுகள் ஆளுகை முடிவில் 1950 யூலை 18இல் எமிலியானுஸ்பிள்ளை யாழ். மறைமாவட்டத்தின் ஐந்தாவது (முதல் மூன்று திருத்தூதுப் பதில் ஆயர்களுடன் சேர்த்து எட்டாவது) ஆயராகப் பொறுப்பேற்றார்.

இப்பொறுப்பேற்றலை 1950 ஆகஸ்ட் 25இல் அறிவிப்புச் செய்துவிட்டு அன்று மாலையே ஐரோப்பிய ஆளுகையிலிருந்து சுதேச ஆளுகைக்குக் கையளித்த மன நிறைவுடன் வெளியேறிச் சில நாட்கள் இளவாலைக்குச் சென்று தங்கிய பின்பு வலித்தூண்டல் புனித அன்னா ஆலயத்தில் சிறிய அறைக்குத் தனது மிகுதிக் காலத்தைக் கழிக்கச் சென்றார். காலனித்துவ ஆட்சியின் யுகம் முடிந்து, இத்தீவு விடுதலை பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் யுகமும் முடிவடைந்தது. யாழ். திருஅவையையும் சுதேச ஆயர் ஒருவரைப் பெற்றுத் தன்னைத்தான் ஆளத்தொடங்கியது.

**காலத்தின் பணியாளர், மதிநுட்ப ஆலோசனையாளர்**

1958இல் இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து சிங்கள மக்கள் வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கும், தமிழ் மக்கள் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கும் இடம்பெயர வேண்டியதாயிற்று. விசேடமாக இவர்களைக் குடியமர்த்த வேண்டிய தேவையும், மன்னார் பெரு நிலப்பரப்பு, வன்னிப் பகுதியில் பின்தங்கிய இடங்களில் ஆலயங்களோடு பாடசாலைகளையும் இவர் ஏற்படுத்தினார். இவ்வாறு 1960வரை பத்து வருடங்களாக இவர் பெரும் பணம், பொருள் செலவில் ஏற்படுத்திப் பராமரித்த பாடசாலைகளும், ஏற்கெனவே ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களினால் அமைக்கப்பட்டு இவரால் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்ட பாடசாலைகளும் 1961 ஜனவரி 23இல் தேசியமயமாக்கப்பட்டன. *(தொடரும்..)*

## அர்த்தமுள்ள ஆன்மீகம் 08

கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டங்களுடன் தொடர்பு, கை வைத்த உடனே விண்வெளி ஓடத்தின் விரைவு. இதுதான் இன்றைய விஞ்ஞான யுகத்தின் யதார்த்தம் ஆகிவிட்டது. நகரச் சூழலிலே, காத்திருத்தல் என்பது நரகம். சிற்றூர்களில் இந்த விரைவும் பரபரப்பும் இன்னும் தொற்றிக் கொள்ளவில்லை. அங்கே மக்கள் பேரூந்திற்காகவோ, அறுவடைக்காகவோ, பருவ மழைக்காகவோ, இருக்கையில் இல்லாத அலுவலர்களுக்காகவோ இன்னும் காத்திருக்கிறார்கள். வாழ்க்கையிலே படிப்புக்கு, பரீட்சைப் பெறுபேறுகளுக்கு, பட்டத்துக்கு, வேலை வாய்ப்புக்கு என்று காத்திருப்பு கல்லறைவரை தொடர்கிறது. காத்திருப்பு ஒரு தொடர் கதைதான். அது முடிவே இல்லாதது.

# செபம் என்பது இறைவனுக்காக காத்திருத்தல்

விவிலியத்தின் பக்கங்களைப் புரட்டினோம் என்றால் "காத்திருத்தல்" என்பது பக்கத்துக்குப் பக்கம் காணக்கூடியதாக உள்ளது. மீட்பின் வரலாறே ஒரு நீண்ட காத்திருப்புத் தான். இந்தக் காத்திருப்பு தொடக்க நூலிலேயே தொடங்கிவிட்டது. தொ.நூல் 1:15ல் "அவள் வித்து உன் தலையை நசுக்கும்" என்ற வாக்குறுதியிலிருந்து ஆரம்பித்தது. வெள்ளப் பெருக்கின் பின்னர் நோவா 40 நாட்கள் காத்திருந்தார். (தொ.நூல் 8:6) "நாற்பது நாட்கள் முடிந்த பின் பேழையில் தாம் அமைத்திருந்த சாளரத்தை நோவா திறந்து, காகம் ஒன்றை வெளியே அனுப்பினார்". ஆபிரகாமும் சாராவும் ஆண்டவரது வாக்குறுதியின் குழந்தைக்காகக் காத்திருக்கின்றனர்.

அன்னா சாமுவேலின் பிறப்புக்காக நீண்ட காலம் காத்திருக்கின்றார். ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட தாவீது, திருப்பொழிவு செய்யப்பட்டாலும் ஆட்சியை ஆரம்பிப்பதற்கு நீண்ட காலம் காத்திருந்து, பல துன்பங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தது. இறைவாக்கினர் எலியா நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்னும் கடவுளின் மலையை அடைந்தபின் ஆண்டவர், "வெளியே வா, மலைமேல் என் திரு முன் வந்து நில். இதோ! ஆண்டவராகிய நான் கடந்து செல்லவிருக்கின்றேன்" என்றார் (1 அரச 19:11) தானியேல் ஆகமத்தில் சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகா என்பவர்கள் தீச்சூளையிலும் ஆண்டவருக்காகச் செபத்தோடு காத்திருந்தனர். தானியேல் 3:18.

புதிய ஏற்பாட்டில் அன்னை மரியா ஒவ்வொன்றையும் தன் இதயத்தில் இருத்தி, ஒவ்வொரு கட்டத்திலும் ஆண்டவருக்காக காத்திருக்கின்றார். இயேசு பலரின் மீட்புக்குக் காரணமாவார் என்னும் சிமியோனின் அறிவிப்பைக் கேட்டு, அந்த மீட்பை எதிர்நோக்கிக் காத்திருந்து அதைத் காணும்வரை இயேசுவோடு இணைபிரியாது இறுதிவரை பயணித்தார். ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பின் பின் சீடர்கள் அன்னை மரியாவோடு சேர்ந்து தூய ஆவியாரின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். "என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்" (தி.ப 1:4) என்றார் இயேசு.

காத்திருப்பது என்பது செப வாழ்வின் வெற்றிப்படி. பூத்திருக்கும் நிலைக்காகச் செடி கொடி காத்திருக்கின்றது. இறையுறவிலும் சிறப்பாக செபத்திலும் காத்திருப்பது முக்கியத்துவம் பெறுகின்றது. செபத்தில் நாம் அவசரப்படமுடியாது. அதாவது, இதை உடனே எனக்குச் செய்து தரவேண்டும் அல்லது தரவேண்டும் என்று கடவுளை நிர்ப்பந்திக்க முடியாது. இறைவன் தன்னுடைய நேரத்தில்தான் நமக்குத் தேவையானதைச் செய்வார். நீங்கள் செபத்தில் அவசரப்பட்டு, பொறுமை இழக்கும் ஒருவரா? உங்கள் தோழமைக்குப் பலர் இருக்கின்றார்கள். திருப்பாடல் நூலில் "இறைவா! எவ்வளவு காலம்" காலம் தாழ்த்துவீர்?" என்ற சொற்றொடர் பலமுறை இடம்பெறுகிறது.

இவ்விதம் வேண்டுவது தவறாகத் தோன்றினாலும், இன்னொரு விதத்தில் இது உறவு நெருக்கத்தையும் ஆழமான விசுவாசத்தையும் காட்டுகிறது. குறிப்பாக தி.பா 13:1 ல் "ஆண்டவரே, எத்தனை நாள் என்னை மறந்திருப்பீர்? இறுதிவரை மறந்துவிடுவீரோ? இன்னும் எத்தனை நாள் உமது முகத்தை எனக்கு மறைப்பீர்?" என்பதைக் காண்கின்றோம். இந்தக் காத்திருத்தல் நம்பிக்கை நிறைந்த ஒன்று என்று மீக்கா 7:7 ல் பார்க்கலாம். "நானோ, ஆண்டவரை விழிப்புடன் நோக்கியிருப்பேன்: என்னை மீட்கும் என் கடவுளுக்காகக் காத்திருப்பேன். என் கடவுள் எனக்குச் செவி சாய்தருள்வார்."

மத்தேயு நற்செய்தி 24ம் 25ம் அதிகாரங்களில் இயேசுவின் நிறைவுகால அறிவுரைகள் நிறைந்துள்ளன. இவற்றில் இயேசு விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள் என்று கூறினாலும் காத்திருத்தல் என்பது முனைப்புப் பெறுகின்றது. மானிடமகன் வரும் நாளும் வேளையும் 24:36-44 நம்பிக்கைக்குரிய பணியாளர் 24:45-51 மணமகளின் தோழியர் உவமை 25:1-13 தாலந்து உவமை 25:14-30 அனைவரின் தீர்ப்பு 25:31-46. இறைவனின் வருகை எந்நேரத்திலும் எச் சந்தர்ப்பத்திலும் வரலாம். எனவே, எந்நேரமும் காத்திருங்கள் என்று முழக்கமிடுகின்றன.



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

எமது செபங்களில் சில உடனடியாகப் பதில் தருவதில்லை. ஏன்? நமக்கு அது உடனடித் தேவையாக இருக்கலாம். ஆனால், அனைத்தையும் அறியும் அதேவேளை எம்மை அன்பு செய்யும் அந்த இறைவனுக்கு அது எமக்கு அவசியமா? இன்னும் உடனடியாக அவசியமா என்று தெரியும். சிலவேளை நாம் கேட்பது நமக்குத் தீமையாகக் கூட அமையலாம். (உ+ம்) ஒரு சிறுபிள்ளை பளபளப்பான கூரிய கத்தியைக் கண்டவுடன் அது எனக்கு வேணும் என்று அடம் பிடிக்கிறது. ஆனால், தந்தை கொடுப்பதற்கு மறுக்கிறார். ஏனென்றால், கத்தி பிள்ளைக்கு ஆபத்தாக அமையலாம் என்று தந்தைக்குத் தெரியும்.

சில செபங்கள் தாமதமாகிப் பதிலளிக்கப்படுகின்றன. மத் 15:22 கானானியப் பெண்ணின் நம்பிக்கை பற்றிக் கூறும்போது, இயேசு உடனடியாகப் பதிலளிக்கவில்லை. ஏனென்றால், இப்பெண்ணின் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. புடமிடப்படுகிறது. எமது விசுவாசத்தைப் பக்குவப்படுத்துவதற்காகவும் இறைவன் தாமதிக்கலாம். எனவே, நாம் காத்திருக்கும்பொழுது எமது உள்ளம், எமது விசுவாசம் பண்படுத்தப்படுகிறது.

சில சமயங்களில் இறைவன் நமது செபங்களைக் கேட்டுப் பதிலளிக்கிறார். ஆனால், நமது மனங்களோ பல்வேறு சத்தங்கள் இரைச்சல்களினால் அவற்றைக் கூர்ந்து கவனிக்கவோ உணரவோ முடிவதில்லை. சில சமயங்களில் நமது செபங்களுக்கு நாம் நினையாத அல்லது எதிர்பாராத விதத்தில் பதிலளிக்கிறார். உ+ம் எனது குடும்ப நிலையைச் சமாளிப்பதற்கு எனக்கு லொத்தர் விழவேண்டுமென்று மன்றாடுகிறேன். நாம் கேட்பதுபோல லொத்தர் விழவில்லை. ஆனால், இறைவன் எனக்கு நல்ல வேலை வாய்ப்பைக் கொடுக்கிறார்.

அனைத்திற்கும் மேலாக நாம் நமது மனத்தில் இருத்தவேண்டியது செபத்திற்கான இறைவனின் பதிலுக்காகக் காத்திருக்கும்பொழுது அப்பதிலோ உலகு சார்ந்த அல்லது நமது உடல் சார்ந்ததாய் இருப்பதை விட நமது ஆன்மா சார்ந்ததாக அல்லது ஆன்மீகம் சார்ந்ததாக இருக்கவேண்டும். லூக் 11:9-13 பகுதியில் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று ஆரம்பிக்கும் இயேசு இறுதியில் "விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி" என்று கூறுகின்றார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

09

### அத்தியாயம் 4



**4.4 தமிழ்க் கிறிஸ்தவர்கள் பழைய முறைகளை மாற்றாது சமாளிக்கும் பண்பையே விரும்புகின்றனர்.**

அத்துடன் உயர்ந்த சாதி என்று தம்மை இனங்காட்டிக் கொண்ட தமிழ்க் கிறிஸ்தவர்கள் கோவிலுக்குள் ஏனைய சாதியைச் சேர்ந்த கிறிஸ்தவரை ஏற்றுக் கொள்ளாததால் சாதிக்கொரு ஆலயம் என்று வெவ்வேறு ஆலயங்களைக் கட்ட மறைபரப்பாளர் அனுமதித்தனர்

ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு கோயில் என மக்கள் வெவ்வேறு சாதியாகக் கணிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். சமத்துவமாக சகோதரத்துவமாகத் திருச்சபை இருக்கவில்லை. தன்னகத்தே வேறுபாடுகளையும், மூடநம்பிக்கைளையும், சகித்துக்கொண்டு, அதேநேரத்திலே, வறியோர்-பணக்காரர், படித்தவர்-படிக்காதவர் என்ற அந்தப் பிரிவினைகளையும், கடைப்பிடித்துக் கொண்டே வந்தார்கள்.

திருமுழுக்கு ஏட்டில் பதியும் பொழுதும் சாதியின் பெயரும் அங்கே குறிப்பிடப்பட்டது.

இறைவன் எமது பொதுத் தந்தையென்றும், மனிதர்கள் எல்லோரும் அவரின் பிள்ளைகள், சமத்துவ உரிமையுடைய சகோதரர்கள் என்பதையும் இவர்களுக்குத் தெளிவாக விளக்கும் சக்தி மறைபரப்பாளரைத் தொடர்ந்து வந்த தமிழ்க் குருக்கள் துறவிகளுக்கும் போதியளவு இருக்கவில்லை.

ஆகையால் தொகையில் மத அமைப்பாகத் திருஅவைகள் வளர்ந்தாலும், குறைகளை அவதானிக்கும் பொழுது, சீர்திருத்தம் மிக முக்கிய தேவையாயிருந்தது என்பதைத் தலைவர்கள் சிலர் உணர்ந்திருந்தனர். ஆனால் அதை எப்படிச் செய்வது என்று தெரியாது ஏங்கினர். புதிய வழிகளை ஆராய அல்லது உரோமைப் பீடத் திடம் எடுத்துக் கூற, தமிழ் ஆயர்களுக்குத் துணிவும் சந்தர்ப்பமும் இருக்கவில்லை. ஆயர்கள் உரோமையினால் தெரிவு செய்யப்படும் பொழுது, சாதியில் குறைந்தவர்களென்று கணிக்கப்பட்டோர் மக்களினால் விரும்பப் படவில்லை. அதனால் தமிழரின் பழக்க வழக்கங்களைச் சமாளித்து நடப்பதே, தமிழ்க் கிறிஸ்தவத்தின் நடைமுறையாக நீண்ட காலம் இருந்தது.

இவ்வாறாகத் தமிழ்க் கிறிஸ்தவர், தம் வாழ்வை ஒரு பக்கத்தில் கிறிஸ்தவ வழிபாடுகளில் பங்கெடுப்பதையும், குடும்ப சமூக வாழ்வைத் தமிழரின் பழைய முறைகளில் வாழ்வதையும், நாம் இன்றைய எமது கணிப்பில் சமாளிக்கும் கிறிஸ்தவமென்று அழைப்பதே பொருத்தமாகும்.

அன்றைய கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் பற்றியோ அவர்களின் நேர்மை புனிதத் தன்மையைப் பற்றியோ, இன்று கேள்வி எழுப்புவது சரியல்ல. அன்றைய தமிழ்ப் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தையும், அவர்களுடைய மீட்பைப் பற்றியும், சந்தேகப்படுவதாகக் கருதக்கூடாது. அத்தகைய கிறிஸ்தவம் இன்றைய பார்வையில் குறைவான கிறிஸ்தவமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதே எமது கருத்து. நாங்கள் இன்றைய கிறிஸ்தவ அறிவிலே, அன்றைய உலகில் இருந்தது சமாளிக்கும் கிறிஸ்தவம் என இன்று கணிக்கின்றோம். ஆகையினால்த்தான் குறைகளை உணர்ந்தவர்களாக சீரான திருத்தம் தேடுகிறோம், முயற்சிக்கின்றோம்.

**4.5 2ஆம் வத்திக்கான் சங்கம் தமிழ்த் திருஅவைகளுக்கும் தலைவர்களுக்கும் புது வழிகளைத் திறந்துள்ளது**

தமிழ்க் கிறிஸ்தவம் ஆரம்பமாகி 400 வருடங்களின் பின் 2ஆம் வத்திக்கான் சங்கம் 1962 - 1965 நடந்தது. இதன் வழியாக எமது திருஅவைக்குப் புத்துயிர் பெறும் சந்தர்ப்பம் பிறந்தது. முதல் 300 ஆண்டுகளிலும் கிடையாத சந்தர்ப்பமும் ஆவியின் ஊக்குவிப்பும் இறைவன் கிருபையால், எமக்கு எமது காலத்தில் கிடைத்துள்ளன. இதுதான் தமிழக் கிறிஸ்தவத்திற்கு பாப்பரசர் 23ஆம் அருளப்பரினால் ஆரம்பிக்கப்பட்ட 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பெரிய கொடை. 400 ஆண்டுகள் கடைப்பிடித்து வந்த சமாளிக்கும் கிறிஸ்தவத்தை, முழுமையான கிறிஸ்தவ மனமாற்றத்திற்குச் சீர்திருத்தம் செய்ய, ஆவியாரின் சந்தர்ப்பம் பிறந்திருக்கிறது.

இம்மாபெரும் சங்கத்தில் 20இக்கு மேற்பட்ட தமிழ் ஆயர்கள் கலந்து, அதன் படிப்பினைகளையும் ஏவுதல்களையும் உள்வாங்கினர். இறைவார்த்தை தமிழிலும், வழிபாடுகள் தமிழிலும், தலைமைத்துவம் தமிழராக மாறவும் தொடங்கியது.

ஆனாலும் சங்கத்தின் முற்போக்கான பார்வையையும் உலகத் திருஅவையின் அறிவுரைகளையும் பின்பற்றி நடக்க, உரோமைத் தலைமைத்துவமும் தமிழ் ஆயர்களின் துணிவும் போதாமல் இருந்தது. வருங்காலத்திலாவது முற்போக்கான வழிகளில் செயற்பட, துணிவு நிறைந்த தலைவர்களை இறைவன் எமக்கு அருளுவாராக.

தமிழ்த் திரு அவைகள் உரோமையின் வழிகாட்டலிலும் சர்வதேச கிறிஸ்தவ அமைப்புகளின் பண உதவியுடனும், தமிழ்ச் சூழலிலே, ஒரு அந்நிய மதமாகச் செயற்பட்டாலும், கல்வியிலும், விதவைகள் அனாதைகள் வறியோர் மட்டில் மனிதாபிமான இரக்கச் செயல்களிலும் ஈடுபடும் அமைப்புகளாக விளங்கியிருக்கின்றன. இன்று இந்தியாவில் அன்னை திரேசா பெரும் மதிப்பும் கவனமும் பெற்றிருப்பது அவவுடைய மனித அபிமான நற்செயல்களுக்காகவே. கிறிஸ்தவர்கள் 2.5 வீதமாக இருந்தாலும், அவர்கள் மதிக்கப்படுவது விசேடமாக அவர்கள் செய்யும் அன்பு இரக்கப் பணிகளினாலேதான். *(தொடரும்..)*

## செபம் என்பது...

10 ம் பக்கத் தொடர்ச்சி

எனவே, செபம் என்பது காத்திருப்பதுதான். கண்கள் பூக்கும்வரை அன்பருக்காகக் காத்திருக்கிறோம். கடவுளுக் காக இப்படித்தான் காத்திருக்கவேண்டும். கடவுளை நான் கட்டாயப்படுத்த முடியாது. கடவுளின் கட்டுப்பாட்டில்தான் நான் இருக்கிறேன். காலம் வந்துவிட்டது என்று அவர் கருதினால் கட்டாயம் அப்போது வருவார். உண்மையைச் சொன்னால், காத்திருக்கும்போது, என் வாழ்வில் கடவுள் எத்துணை இன்றியமையாதவர் என்பதை நான் உணர்கிறேன் ஏற்றுக் கொள்கிறேன். "முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா?" நாம் கேட் பதற்கு மேலாக நன்மைத்தனங்களைச் சொரிகின்ற இறைவனாக அவர் இருப்பதை உணர்ந்தவர்களாக எமது செபங்களும் காத்திருத்தலும் அமையவேண்டும்.


## 2ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 24 . 08 . 1959



விண்ணில் 22 . 02 . 2020

அமரர்

**ஷிவோன் நாளினி ரவீந்திரன்**

" அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்;
ஏனெனில் அவர்களின் செயல்கள்
அவர்களைப் பின் தொடரும்"
(தி.வெ.14 :13)

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

AD-11



## விண்ணக வாழ்வில் 2ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1947



உதிர்வு 03 . 02 . 2020

**அமரர் சவரிமுத்து ஆரோக்கியநாதர்**

(நிரந்தர மறையாசிரியர்)

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

இல. 76, புலோலி தெற்கு,
புலோலி.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

AD-07



## மண்ணக வாழ்வில் நூறு விண்ணக வாழ்வில் 29 ஆண்டுகளில் நினைவு கூருகின்றோம்

மண்ணகம் 13 . 06 . 1922



விண்ணகம் 14 . 02 . 1993

**அமரர் சஞ்சு செபமாலை**

மண்ணகப் பிறப்பில் இவ்வாண்டு நூறானதோ
விண்ணக நிறைவில் இளைப்பாறி இருபத்தொன்பதானதோ
ஆண்டுகள் கடந்தும் அழியவில்லை ஐயா
உங்கள் அன்பான நினைவுகள்
எம் மனதிலே....
கலையாத உங்கள் நினைவுகளோடு
வாழுகின்றோம் நாங்கள்
ஆண்டவன் சந்நிதியில் அமைதியாய் இளைப்பாறுங்கள்
உங்கள் ஆத்ம இளைப்பாற்றிக்காக
தினம் தினம் வேண்டுகின்றோம்

மனற்குடியிருப்பு,
முல்லைத்தீவு

குடும்பத்தினர்

AD-13



## 1ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 05 . 08 . 2001



உதிர்வு 21 . 02 . 2021

**அமரர் மரியவேதநாயகம் அமலமெஜன்**

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)

அழகான உம் முகம் அதில்
அழியாத புன்னகை
வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி
விட்டுச் சென்ற எம் செல்வப் புதல்வா மெஜனே
இறைபாதம் நாடி இன்று ஓராண்டு ஆனதுவே
எம் இதயத்தில் நீ என்றும் அணையாத தீபமடா...
கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலித்தோம்
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

10ம்வட்டாரம்,
நெடுந்தீவு.

பிரிவால் நினைந்துருகும்
அன்புப் பெற்றோர், உடன்பிறப்புக்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்

AD-12



## விண்ணக பிறப்பின் 20வது ஆண்டு நினைவு தினம்

மண் மகிழ் 11 . 04 . 1937



விண் மகிழ 03 . 02 . 2002

அமரர்

**பத்திநாதர் அருளானந்தம்**

**என்றும் எம்மோடு வாழும் இறைவா!**

எம் அன்புத் தந்தை வழியாக நீர் எமக்குச் செய்த நன்மைத்தனங்களுக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். உமது அளவு கடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு அமைதி அளித்து இன்ப வான் வீட்டில் இடமளித்தருள வேண்டுகின்றோம். ஆமென்.

Ad-04

புனித லூர்துமாதா கோவிலடி
தும்பளை,
பருத்தித்துறை

அன்புடன் நினைவு கூரும்:
குடும்பத்தினர்



## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணகம் 02.03.1973

விண்ணகம் 17.01.2022

அமரர்

**மரியதாஸ் ஹேமன் தவச்செல்வி**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர்
ஆலயத்தில் 16.02.2022 அன்று திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்.

கணவன், பிள்ளைகள்

AD-15



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 29 . 10 . 1949



இறைவன் அடியில் 25 . 02 . 2019

அமரர்

**பாக்கியநாதர் மரிய யுலேக்கா**

'ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்.
ஆண்டவரின் அழகை நான் காணவேண்டும்' (திருப்பாடல் 27:4)
ஆண்டவருக்குள் இளைப்பாறும் அடியாளின் நித்திய இளைப்பாற்றிக்காக
26.02.2022 அன்று காலை 5.30 மணிக்கு பரிசுத்த புதுமைமாதா ஆலயத்தில்
ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி
அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினரும், உறவுகளும்

AD-06

# குருத்துவத் திருநிலைப்படுத்தல்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு இலங்கை கிளரேசியன் சபையைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் எதிர்வரும் 16ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் பணிக் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களாகிய கி.ஆன்றோய் அரவிந், யோ. டோனால் கிறிஸ்ரி, தே.ப. ஜோண்சன் ஆகியோரே யாழ். ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக் குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் கி. ஆன்றோய் அரவிந் கி.ச**

இவர் வலித்தூண்டல் - ஊறணிப் பங்கினைச் சார்ந்தவர்களும், தற்போது ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்கில் வாழ்ந்து வருகின்றவர்களுமான திரு.திருமதி. கிருபானந்தராஜா மேரி நோயெலா தம்பதியினரின் மகனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும், தனது இடைநிலை மற்றும் உயர் கல்வியினை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். இவர் தனது சிறிய குருமட உருவாக்கல் பயிற்சியை நீர்கொழும்பு புனித கிளாரட் குரு மடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், தனது இறையியல் கற்கை நெறியை கண்டி தேசிய குருமடத்திலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் யோ. டொனால் கிறிஸ்ரி கி.ச**

இவர் புங்குடுதீவுப் பங்கின் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத் திருஅவையைச் சேர்ந் தவர். திரு.திருமதி யோகராசா டயசிவனசா தம்பதியினரின் மகனாவார். இவர் தனது பாடசாலைக் கல்வியை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்தார். இவர் தனது சிறிய குருமடக் கல்வியை நீர்கொழும்பு புனித கிளாரட் குருமடத்திலும், மெய்யியல் கற்கையினை இந்தியாவிலுள்ள கிளாரட் பவன் குருமடத்திலும் தனது இறையியல் கற்கை நெறியினைக் கண்டி தேசிய குருமடத்திலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் தே.ப.ஜோண்சன் கி.ச**

இவர் பெரியவிளான் பங்கின் புனித யுவானியார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்தவர். திரு.திருமதி தேவபாலன் பற்றிக் சாந்தலூசியா தம்பதியினரின் மகனான இவர், தனது ஆரம்பக் கல்வியை கைவேலி கணேச வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை பண்ட த்தரிப்பு புனித யசிந்தா மகாவித்தியாலயத்திலும் மற்றும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை கிளாரட் அகத்திலும் மற்றும் நீர்கொழும்பு புனித கிளாரட் சிறிய குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், நவசன்னியாச பயிற்சியை குருநாகலிலும், இறையியல் கற்கை நெறியை கண்டி தேசிய குருமடத்திலும் கற்றுத் தேர்ந்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

# குளமங்கால் உத்தான பூமியில் சிற்றாலயம்



குளமங்கால் பங்கில் அமைக்கப்பெற்று வந்த புனித சவேரியார் உத்தான பூமி (சேமக்காலை) சிற்றாலயம் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையால் தை மாதம் 24ஆம் திகதி ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

ஆழகிய தோற்றத்துடன் அமைக்கப்பட்ட சிற்றாலயமும் அத்துடன் இணைந்த சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் திருச்சுருபமும், 15 அடி உயர உயிர்த்த ஆண்டவர் திருச்சுருபமும் வரவேற்பு வளைவும் முழு ஒளி வசதிகளுடன் அமைக்கப்பட்ட உள் வீதியும் புனரமைப்பு செய்யப்பட்ட இச்சேமக்காலைக்கு அழகிய தோற்றத்தைக் கொடுப்பனவாக அமைந்துள்ளன.

பங்குத்தந்தை அருட்திரு பாஸ்கரன் அடிகளின் நெறிப்படுத் தலில் குளமங்காலிலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் உள்ள பங்கு மக்களின் முயற்சியிலும் நிதிப்பங்களிப்பிலும் அமைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நற்கருணை அற்புத ஆசீர்வாதத்தின் 200வது யூபிலி ஆண்டுத் திருப்பலி



1822ம் ஆண்டு மாசி மாதம் 3ம் நாள் நடந்த அற்புத ஆசீர்வாதத்தில் இருக்கிறவராக இருக்கிறவர் நாமே" என்று உறுதிப்படுத்திய நிகழ்வை 03.02.2022 அன்று 200வது யூபிலி ஆண்டை நினைவு கூர்ந்து யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில், யாழ் மறைமாவட்டக் குரு முதல்வரும் எமது திருக்குடும்ப துணைக் குருவுமாகிய அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளும், அமலமரித் தியாகிகள் சபை யாழ் மாகாண முதல்வர் அருட்தந்தை யூஜின் பெனடிக்ற் அடிகளும் ஏனைய குருக்களும் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஐந்து அழைத்தல்களைக் கொண்ட திருக்குடும்ப சபை அங்கத்தவர்களும் இணைந்து சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு குரு முதல்வரால் ஆசீர் வழங்கப்பட்டது.

# கிளி. முல்லை. பங்குகளில் திருப்பாலத்துவ சபையினரைச் சந்தித்த தேசிய இயக்குநர்





முல்லை. கிளி மறைக்கோட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குநர் அருட்பணி பசில் றொகான் பெர்னாண்டோ அடிகளாரை பரந்தன் பங்குத் திருப்பாலத்துவ சபைப் பிள்ளைகள், ஊக்கு விப்பாளர்கள், பங்குத் தந்தை அருட்பணி R. சகாயநாயகம் அடிகளாரும் இணைந்து வரவேற்று நின்றனர். தொடர்ந்து தர்மபுரம் பங்கிற்கு விஜயம் செய்தபோது தர்மபுரம் பங்குச் சிறார்களும் வட்டக்கட்சி சிறார்களும் இணைந்து தேசிய இயக்குநருடன் ஓர் ஒன்றுகூடலில் பங்கேற்றனர். இருநூறுக்கும் அதிகமான திருப்பாலத்துவச் சபைச் சிறார்கள் பங்கு பற்றிய இவ் ஒன்றுகூடலை தர்மபுரம் பங்குத்தந்தை அருட்பணி நிக்சன் கொலின் அடிகளும், வட்டகச்சிப் பங்குத்தந்தை சுதர்சன் அடிகளும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர்.

# குருமடங்களைத் தரிசித்த மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநர்





மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநர் அருட்பணி பசில் றொகான் அடிகள் எமது மறைமாவட்டத்தில் உள்ள சிறிய பெரிய குருமடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு அதிபர்கள், விரிவுரையாளர்கள், குருமட மாணவர்களைச் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்பின்போது குருமட மாணவர்களின் அவசியத் தேவைப்பாடுகளையும் கேட்டறிந்து கொண்டார். இவ் விஜயத்தில் சிறிய குருமட மாணவர்களுக்கு இசைக் கருவிகள் சிலவும் தேசிய இயக்குநரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.